# அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்

## செயற்குழு-பொதுக்குழு கூட்டத்தில்

## நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

நாள் : 15.12.2024 – ஞாயிற்றுக் கிழமை

இடம் : ஸ்ரீவாரு வெங்கடாசலபதி பேலஸ்,
வானகரம், சென்னை.

| தீ. எண் | தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|
| 1. | அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நிறுவனத் தலைவர் 'பாரத் ரத்னா' புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் மனைவியும், கலைத் துறையைச் சேர்ந்தவரும், தமிழ் நாடு முன்னாள் முதலமைச்சருமான போற்றுதலுக்குரிய அம்மையார் திருமதி ஜானகி ராமச்சந்திரன் அவர்களின் நூற்றாண்டு விழாவை பெருமை பொங்க நடத்திக் காட்டிய, கழகப் பொதுச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் தமிழ் நாடு முன்னாள் முதலமைச்சர் 'புரட்சித் தமிழர்' மாண்புமிகு எடப்பாடியார் அவர்களுக்கு பாராட்டும், நன்றியும் ! | 1 |
| 2. | தமிழ் நாட்டில் மிகப் பெரிய பேரழிவை 'ஃபெஞ்சல்' புயல் ஏற்படுத்திய நிலையில் அதை எதிர்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கை, பாதுகாப்பு நடவடிக்கை, மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கை எதையும் செய்யாமல், பேரிடர் காலங்களில் மக்களுக்கான குறைந்தபட்சம் உணவு, உறைவிடம், குடிநீர், சுகாதார வசதி உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளைக்கூட ஒழுங்காக, முறையாக நிறைவேற்றாத திரு. ஸ்டாலினின் தலைமையிலான விடியா திமுக அரசுக்கு கடும் கண்டனம் ! | 3 |
| 3. | விடியா திமுக ஆட்சியில் சீரழிந்து வரும் சட்டம்–ஒழுங்கு; போதைப் பொருட்கள் நடமாட்டம்; ஏழை, எளிய, நடுத்தர மக்களை வாட்டி வதைக்கும் விலைவாசி உயர்வு, மின்கட்டண உயர்வு, சொத்து வரி உயர்வு, வீட்டு வரி உயர்வு, குடிநீர் கட்டண உயர்வு, பால் விலை உயர்வு, பத்திரப் பதிவுக் கட்டண உயர்வு, முத்திரைத் தாள் கட்டண உயர்வு, வழிகாட்டி மதிப்பீடு உயர்வு என்று தமிழ் நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை நசுக்கி வரும் நிர்வாகத் திறமையற்ற திரு. ஸ்டாலின் தலைமையிலான விடியா திமுக அரசுக்கு கடும் கண்டனம் ! | 7 |
| 4. | திமுக தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாமலும்; அரசு ஊழியர்கள் கோரி வரும் பழைய ஓய்வூதியத் திட்டம், ஆசிரியர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் ஆகியோரின் ஊதிய முரண்பாடு, பணி நிரந்தரம் ஆகியவற்றை நிறைவேற்றாமலும்; விவசாயிகள், தொழிலாளர்கள், மீனவர்கள், | 10 |

| | | |
|---|---|---|
| | நெசவாளர்கள் ஆகியோரின் கோரிக்கைகளை நிறைவேற்றாமலும் தொடர்ந்து வஞ்சித்து வரும் விடியா திமுக அரசுக்கு கண்டனம் ! | |
| 5. | டங்ஸ்டன் சுரங்கம் தமிழகத்தில் மேலூருக்கு அருகில் கொண்டுவர மத்திய அரசு ஒப்பந்தப் புள்ளி கோரியபோதே, 10 மாதகாலம் அவகாசம் இருந்த நிலையிலும் அவற்றைத் தடுக்கத் தவறிய திரு. ஸ்டாலின் தலைமையிலான விடியா திமுக அரசுக்கும்; நாடாளுமன்றத்தில் இச்சட்டம் கொண்டுவரும்போதும், அதற்குப் பிறகும் திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் போதிய அழுத்தம் கொடுத்து தடுக்கத் தவறிவிட்ட திமுக தலைவர் திரு. ஸ்டாலினுக்கும் கடும் கண்டனம்!<br>தமிழகத்தில் மதுரை மாவட்டம், மேலூர் அருகில் டங்ஸ்டன் சுரங்கம் அமைவதை மத்திய அரசு கைவிடுமாறு வலியுறுத்தல் ! | 15 |
| 6. | i) உலகப் பொதுமறையாகவும், இந்தியாவுக்கு வாழ்வியல் வழிகாட்டியாகவும், தமிழகத்திற்கு காலம் வழங்கிய கொடையாகவும் திகழ்கின்ற திருக்குறளை தேசிய நூலாக அறிவித்திட மத்திய அரசை வலியுறுத்துதல்!<br>ii) சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாக தமிழ் இடம்பெற வலியுறுத்தல்!<br>iii) இந்தித் திணிப்புக்கு எதிர்ப்பு – மத்திய அரசால் இயற்றப்படும் சட்டங்களின் பெயர்களுக்கு இந்தியில் பெயர் வைப்பதைக் கைவிட்டு, ஆங்கிலத்திலேயே தொடர மத்திய அரசுக்கு வலியுறுத்தல்! | 19 |
| 7. | மக்களுக்கான திட்டங்களைத் தீட்டி அவைகளை செயல்படுத்துவதற்கு நிதி ஒதுக்காமல்; திட்டமிடல் எதுவுமின்றி விளம்பரத்திற்காக 'ஃபார்முலா 4' கார் பந்தயம் நடத்துதல்; வரைமுறையின்றி சிலைகள் வைத்தல்; பூங்காக்கள் அமைத்தல்; பேனா நினைவுச் சின்னம்; பலகோடி ரூபாய் மதிப்பீட்டில் பன்னாட்டு கூட்ட அரங்கம் கட்டுதல் போன்றவற்றிற்கு முன்னுரிமை கொடுத்து, ஆடம்பர செலவு செய்து, மக்கள் நலன்களை பின்னுக்குத் தள்ளி அரசு நிதியை வீணடிக்கும் விடியா திமுக அரசுக்கு கடும் கண்டனம்! | 22 |

| | | |
|---|---|---|
| **8.** | கழக ஆட்சியின்போது குடிமராமத்துத் திட்டம், தடுப்பணைகள் திட்டம், அணைகள், ஏரிகள், குளங்கள் மற்றும் நீர்நிலைகளை ஆழப்படுத்தி நீரை சேமிக்கும் திட்டம் ஆகியவை நிறைவேற்றப்பட்டதை, விடியா திமுக அரசு தொடர்ந்து செயல்படுத்தத் தவறியதற்கு கண்டனம் ! | **25** |
| **9.** | தமிழ் நாடு தண்ணீர் பற்றாக்குறை கொண்ட மாநிலம். அதனால், விவசாயம் மற்றும் குடிநீர் தேவைக்காக அண்டை மாநிலங்களை நம்பியிருக்க வேண்டியுள்ளது. கழக ஆட்சியில் தொலை நோக்குப் பார்வையோடு கோதாவரி–காவிரி இணைப்புத் திட்டம் மற்றும் பரம்பிக்குளம் ஆழியாறு, பாண்டியாறு–புன்னம்புழா ஆகிய திட்டங்களையும், தொடர் நடவடிக்கை எடுத்து செயல்படுத்தத் தவறிய விடியா திமுக அரசுக்குக் கண்டனம் ! | **29** |
| **10.** | நீட் தேர்வு ரத்து குறித்து கபட நாடகம் ஆடிக்கொண்டிருக்கும் திமுக அரசுக்கு கடும் கண்டனம் ! | **31** |
| **11.** | வாக்காளர்கள் சேர்த்தல், நீக்குதல் போன்றவற்றில் பல்வேறு குளறுபடிகள் நிலவுவதை சரிசெய்திடவும்; தேர்தல் நியாயமாக நடத்தப்படவும் இந்திய தேர்தல் ஆணையத்தை வலியுறுத்தல்! | **33** |
| **12.** | கல்வி, பொருளாதாரம், வேலைவாய்ப்பு ஆகியவற்றில் அனைவருக்கும் சம உரிமையையும், சம வாய்ப்புகளையும் வழங்கிடும் வகையில், சாதிவாரி கணக்கெடுப்பினை எடுக்க விடியா திமுக அரசை வலியுறுத்தல்! | **35** |
| **13.** | i) சிறுபான்மையினர் நலன் காக்கும் வகையில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலங்களில் நடைமுறைப்படுத்திய திட்டங்களை முடக்கிவிடாமல் தொடர்ந்து செயல்படுத்தி, சிறுபான்மையினர் நலன் காக்கப்பட வேண்டும் என்று விடியா திமுக அரசுக்கு வலியுறுத்தல் !<br>ii) 2021, சட்டமன்றப் பொதுத் தேர்தலின்போது, திமுக ஆட்சிக்கு வந்தால் 20 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் வாடும் இஸ்லாமிய சிறைவாசிகளை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துவிட்டு, இஸ்லாமிய சிறைவாசிகளை விடுதலை செய்வதற்கு எவ்வித முயற்சியையும் மேற்கொள்ளாத, விடியா திமுக அரசைக் கண்டிக்கின்றோம் ! | **37** |

| | | |
|---|---|---|
| | iii) பட்டியலின மக்களின் உரிமைகளைக் காப்பாற்றவும், பாதுகாக்கவும் தவறிய விடியா திமுக அரசுக்கு கண்டனம் ! | |
| **14.** | மாநிலங்களின் உரிமையைப் பறிக்கும் வகையில், மாநிலப் பட்டியலில் இடம்பெற்றிருந்த கல்வியை, நாட்டில் அவசர நிலை அமலில் இருந்த காலகட்டத்தில் பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டதை, மீண்டும் மாநிலப் பட்டியலில் சேர்க்கும் வகையில், அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர மத்திய அரசை வலியுறுத்தல் ! | **40** |
| **15.** | தமிழ் நாட்டிற்கான நிதிப் பகிர்வினை பாரபட்சமில்லாமல் வழங்கிட மத்திய அரசை வலியுறுத்தல் ! | **43** |
| **16.** | ‘அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்’ புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா ஆகிய இருபெரும் தலைவர்களின் வழியிலே செயல்பட்டு, ஆளுமைத் திறன் மிக்க அரசியல் தலைவராகத் திகழும் கழகப் பொதுச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், தமிழ் நாடு முன்னாள் முதலமைச்சர் ‘புரட்சித் தமிழர்’ மாண்புமிகு எடப்பாடி K. பழனிசாமி அவர்களை **2026–ல்** மீண்டும் தமிழ் நாடு முதலமைச்சராக்குவோம் என சூளுரை ஏற்போம் ! | **45** |

## தீர்மானம் – 1

**அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நிறுவனத் தலைவர் ‘பாரத் ரத்னா’ புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் மனைவியும், கலைத் துறையைச் சேர்ந்தவரும், தமிழ் நாடு முன்னாள் முதலமைச்சருமான போற்றுதலுக்குரிய அம்மையார் திருமதி ஜானகி ராமச்சந்திரன் அவர்களின் நூற்றாண்டு விழாவை பெருமை பொங்க நடத்திக் காட்டிய, கழகப் பொதுச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் தமிழ் நாடு முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு ‘புரட்சித் தமிழர்’ எடப்பாடியார் அவர்களுக்கு பாராட்டும், நன்றியும் !**

தமிழகத்தின் முதல் பெண் முதலமைச்சர் என்ற பெருமையைப் பெற்றவரும், வரலாறாய் விளங்கியவருமான அம்மையார் திருமதி ஜானகி ராமச்சந்திரன் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை சிறப்புடன் நடத்திக் காட்டிய கழகப் பொதுச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், தமிழ் நாடு முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு ‘புரட்சித் தமிழர்’ எடப்பாடி K. பழனிசாமி அவர்களுக்கு இப்பொதுக்குழு தமது நெஞ்சார்ந்த பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறது.

‘பொன்மனச் செம்மல்’ புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும், அம்மையார் திருமதி ஜானகி ராமச்சந்திரன் அவர்களுக்கும், நூற்றாண்டு விழாவை எழுச்சியுடன் நடத்திக் காட்டிய பெருமைக்குரியவர் கழகப் பொதுச் செயலாளர் மாண்புமிகு ‘புரட்சித் தமிழர்’ எடப்பாடியார் அவர்கள்.

அம்மையார் திருமதி ஜானகி ராமச்சந்திரன் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை சிறப்பிக்கும் வகையில், மங்கள இசையில் தொடங்கி, நூற்றாண்டு விழா மலர் வெளியீடு, கவியரங்கம், பட்டிமன்றம், கலை நிகழ்ச்சிகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் சிறப்பாக நடத்தப்பட்டன.

நிறைவாக, கழகப் பொதுச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், தமிழ் நாடு முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு ‘புரட்சித் தமிழர்’ எடப்பாடியார் அவர்கள் எழுச்சியுரையாற்றி நூற்றாண்டு விழாவிற்குப் பெருமை சேர்த்தார்.

நூற்றாண்டு விழாவில், கழகப் பொதுச் செயலாளர் மாண்புமிகு 'புரட்சித் தமிழர்' எடப்பாடியார் அவர்களால் திறந்துவைக்கப்பட்ட அம்மையார் திருமதி ஜானகி ராமச்சந்திரன் அவர்களின் திருஉருவப் படத்தை, தலைமைக் கழகத்தில் வைத்து பெருமைப்படுத்தியவர், நம் கழகப் பொதுச் செயலாளர் மாண்புமிகு 'புரட்சித் தமிழர்' எடப்பாடியார் அவர்கள்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., அம்மையார் திருமதி ஜானகி ராமச்சந்திரன் ஆகியோருக்கு மேலும் புகழ் சேர்க்கும் வகையில், இந்த நூற்றாண்டு விழாவை அறிவித்து, நம் அனைவரது நினைவில் வாழும் தலைவர்களின் பேரும், புகழும் நிலைத்து நிற்கும் அளவிற்கு நடத்திக் காட்டிய, கழகப் பொதுச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், தமிழ் நாடு முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு 'புரட்சித் தமிழர்' எடப்பாடியார் அவர்களுக்கு இப்பொதுக்குழு தமது நெஞ்சார்ந்த பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்து மகிழ்கிறது.

**முன்மொழிபவர்கள்**

**டாக்டர் அ. தமிழ்மகன் உசேன்**
கழக அவைத் தலைவர்
முன்னாள் தலைவர், தமிழ் நாடு வக்ஃபு வாரியம்

**திருமதி S. கோகுல இந்திரா**
கழக அமைப்புச் செயலாளர்
கழக செய்தித் தொடர்பாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. R. முருகையாபாண்டியன், Ex. M.L.A.,**
கழக அமைப்புச் செயலாளர்

**திரு. V. சோமசுந்தரம்**
காஞ்சிபுரம் மாவட்டக் கழகச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. P.R.G. அருண்குமார், M.L.A.,**
கோவை புறநகர் வடக்கு
மாவட்டக் கழகச் செயலாளர்

**திரு. செ.ம. வேலுசாமி**
கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. ப. தனபால், M.L.A.,**
கழக அமைப்புச் செயலாளர்
தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் தலைவர்

**திரு. சொரத்தூர் இரா. ராஜேந்திரன், Ex. M.L.A.,**
கழக அமைப்புச் செயலாளர்
அனைத்துலக MGR மன்ற துணைச் செயலாளர்
கடலூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர்

**டாக்டர் V.P.B. பரமசிவம், Ex. M.L.A.,**
கழக இளைஞர் பாசறை,
இளம் பெண்கள் பாசறைச் செயலாளர்

**திரு. சிறுணியம் P. பலராமன், Ex. M.L.A.,**
திருவள்ளூர் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர்

**திரு. C. கிருஷ்ணமுரளி, M.L.A.,**
தென்காசி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர்

**திரைப்பட இயக்குநர் திரு. லியாகத் அலிகான்**
கழக கலைப் பிரிவுத் தலைவர்
கழக செய்தித் தொடர்பாளர்

**வழிமொழிபவர்கள் : அனைத்துப் பொதுக்குழு உறுப்பினர்களும்**

## தீர்மானம் – 2

**தமிழ் நாட்டில் மிகப் பெரிய பேரழிவை 'ஃபெஞ்சல்' புயல் ஏற்படுத்திய நிலையில் அதை எதிர்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கை, பாதுகாப்பு நடவடிக்கை, மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கை எதையும் செய்யாமல், பேரிடர் காலங்களில் மக்களுக்கான குறைந்தபட்சம் உணவு, உறைவிடம், குடிநீர், சுகாதார வசதி உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளைக்கூட ஒழுங்காக, முறையாக நிறைவேற்றாத திரு. ஸ்டாலினின் தலைமையிலான விடியா திமுக அரசுக்கு கடும் கண்டனம் !**

சமீபத்தில் உருவான 'ஃபெஞ்சல்' புயலின் தாக்கத்தால் பெய்த கனமழையின் காரணமாக 14 மாவட்டங்கள் பாதிப்புக்குள்ளாயின. குறிப்பாக, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, கடலூர், கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாயின. அந்த மாவட்டங்களில் உள்ள அணைகள், ஆறுகள், ஏரிகள் நிரம்பி கரைபுரண்டு வெளியேறிய வெள்ளத்தால் மக்கள் வீடுகளைவிட்டு வெளியேறி, உடைமைகளைத் துறந்து, சொல்லொண்ணாத் துயரத்திற்கு ஆளானார்கள்.

'ஃபெஞ்சல்' புயலின்போது முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததால், மழை வெள்ளத்தால் ஒன்றரை கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பாதிப்பு; 14 மாவட்டங்களில் பெரும் பாதிப்பு என்ற நிலை உருவானது. ஆனால், வடகிழக்குப் பருவமழை காலத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்காமல் வீண் தம்பட்டம் அடித்த திரு. ஸ்டாலினின் தலைமையிலான திமுக அரசு, புயலை எதிர்கொள்வதில் தவறு இழைத்ததன் காரணமாக மனித உயிரிழப்பு, பயிர் சேதம், கால்நடைகள் உயிரிழப்பு, உடைமைகள் இழப்பு, கட்டமைப்பு சேதாரம் எனத் தொடங்கி, வரலாறு காணாத நிலச் சரிவு காரணமாக பல உயிர்களை பலிகொடுத்து, மூன்று மாதத்திற்கு முன்பு திமுக ஆட்சியில் கட்டி

திறக்கப்பட்ட 16 கோடி ரூபாய் மதிப்பிலான தென்பெண்ணையாற்றின் குறுக்கே கட்டப்பட்ட பாலம் வெள்ளநீரால் அடித்துச்செல்லப்பட்ட அவல நிலையை தமிழகம் இதுவரை கண்டதில்லை.

இதேபோல், கடலூர் மாவட்டம், கெடிலம் ஆற்றில் செம்மேடு பகுதியில் 22.50 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டு வரும் மேம்பாலம் மற்றும் கட்டுமானப் பொருட்கள் 5.12.2024 அன்று மாலை, வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட அவல நிலையும் நடந்தேறியது.

மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையத்திற்குச் சென்று நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது என்று அறிக்கை கொடுத்துவிட்டு, ஒட்டுமொத்தமாக மக்களை வெள்ளத்தால் மூழ்கடித்த செயல், கையாலாகாத திமுக அரசின் நிர்வாகத் திறமையின்மையையே காட்டுகிறது.

உயிர் சேதம், பயிர் சேதம், கால்நடைகள் உயிரிழப்பு என்று பெரும் துயரத்திற்கும், துன்பத்திற்கும் அப்பகுதி மக்கள் ஆளானார்கள். இதற்கெல்லாம் முக்கிய காரணம் திறமையற்ற, கையாலாகாத, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்காத பொம்மை முதலமைச்சர் திரு. ஸ்டாலின் தலைமையிலான விடியா திமுக அரசுதான். இந்த விடியா திமுக ஆட்சியில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையும் இல்லை; அதன் பின்னர் வழங்கப்படும் நிவாரண உதவிகளும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முறையாகக் கிடைக்கவில்லை.

குறிப்பாக, சாத்தனூர் அணையின் கொள்ளளவான 119 அடியை எட்டும்வரை நீரை நிரப்பிவிட்டு, திடீரென்று எந்தவித முன்னறிவிப்பும் இன்றி நள்ளிரவில் வெள்ள நீரைத் திறந்துவிட்டதால், தென்பெண்ணை ஆற்றில் கரைபுரண்ட வெள்ளம் பெருத்த சேதத்தை ஏற்படுத்தியது. இதனால்,

கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை ஆகிய நான்கு மாவட்டங்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த அவல நிலைக்கு நிர்வாகத் திறமையற்ற திமுக அரசுதான் முழுமுதற் காரணமாகும்.

தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே திமுக ஆட்சியில் கட்டப்பட்டு திறந்துவைக்கப்பட்ட பாலம் முற்றிலுமாக உடைந்து சேதமடைந்து 16 கோடி ரூபாய் வீணாகி விரயமானதற்கும், கெடிலம் ஆற்றில் 22.50 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டு வந்த மேம்பாலம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட அவல நிலை நடந்தேறியதற்கும் இந்த அரசின் திட்டமிடலின்மையே காரணம்.

சாத்தனூர் அணையில் இருந்து வெளியேற்றப்படும் அதிகபட்ச நீரின் அளவைக் கணக்கிட்டு, அதாவது 1972–ல் 2 லட்சம் கன அடிக்குமேல் நீர் வெளியேற்றப்பட்ட நிலையில், அதை கணக்கில்கொண்டு பாலத்தை வடிவமைத்து உறுதியாகக் கட்டியிருக்க வேண்டும். அப்படி செய்யாமல், மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ‘புரட்சித் தமிழர்’ திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் எழுப்பிய கேள்விகளை உதாசீனப்படுத்தும் வகையில் பொம்மை முதலமைச்சரும், அந்தத் துறையின் அமைச்சரும் அலட்சியமாக அளித்த பதில், வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதாக இருக்கிறது. இதன்மூலம் ஆட்சியாளர்களின் ஆணவம் வெளிப்பட்டது.

இயல்பு நிலை திரும்பும்வரை மக்களுக்கான அனைத்துத் தேவைகளும் தடையின்றி கிடைப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல், மக்களை பரிதவிக்க வைத்த விடியா திமுக அரசுக்கு இப்பொதுக்குழு தனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

ஆட்சியாளர்கள் தங்களது இயலாமையை, திறமையின்மையை மூடி மறைக்க முயலுவதை விட்டுவிட்டு, மத்திய அரசு மாநிலப் பேரிடர் நிதிக்கு வழங்கி இருக்கின்ற நிதியை வீணடித்துவிடாமல், முறையாக கணக்கெடுப்பு நடத்தி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம், உயிரிழப்புகள், பயிர் சேதம், கால்நடைகள் இறப்பு, வீடுகள், உடைமைகள் சேதம் ஆகியவற்றிற்கு இழப்பீடும், பாதிக்கப்பட்ட அனைத்துத் தரப்பு மக்களின் வாழ்வாதாரத்தையும் மீட்டெடுக்க, விடியா திமுக அரசை இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

## முன்மொழிபவர்கள்

**திரு. கே.பி. முனுசாமி, M.L.A.,**
கழக துணைப் பொதுச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. K.P. அன்பழகன், M.L.A.,**
கழக அமைப்புச் செயலாளர்
தருமபுரி மாவட்டக் கழகச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. V.V. ராஜன் செல்லப்பா, M.L.A.,**
கழக அமைப்புச் செயலாளர்
மதுரை புறநகர் கிழக்கு
மாவட்டக் கழகச் செயலாளர்

**திருமதி கீர்த்திகா முனியசாமி**
கழக மகளிர் அணி இணைச் செயலாளர்

**திரு. என். சின்னத்துரை**
கழக அமைப்புச் செயலாளர்
கழக இளைஞர் பாசறை,
இளம் பெண்கள் பாசறை துணைச் செயலாளர்

**திரு. R. மனோகரன்**
கழக அமைப்புச் செயலாளர்
அரசு தலைமை முன்னாள் கொறடா

**திரு. மாதவரம் V. மூர்த்தி**
திருவள்ளூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. V. அலெக்சாண்டர், Ex. M.L.A.,**
திருவள்ளூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர்

**திரு. கப்பச்சி D. வினோத்**
நீலகிரி மாவட்டக் கழகச் செயலாளர்

**திரு. S. செல்வமோகன்தாஸ்பாண்டியன், Ex. M.L.A.,**
தென்காசி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர்

**திரு. பாப்புலர் V. முத்தையா**
கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர்

**வழக்கறிஞர் திருமதி K. சிவசங்கரி**
கழக செய்தித் தொடர்பாளர்
கழக வழக்கறிஞர் பிரிவு துணைச் செயலாளர்

**வழிமொழிபவர்கள் : அனைத்துப் பொதுக்குழு உறுப்பினர்களும்**

# தீர்மானம் – 3

**விடியா திமுக ஆட்சியில் சீரழிந்து வரும் சட்டம்–ஒழுங்கு; போதைப் பொருட்கள் நடமாட்டம்; ஏழை, எளிய, நடுத்தர மக்களை வாட்டி வதைக்கும் விலைவாசி உயர்வு, மின்கட்டண உயர்வு, சொத்து வரி உயர்வு, வீட்டு வரி உயர்வு, குடிநீர் கட்டண உயர்வு, பால் விலை உயர்வு, பத்திரப் பதிவுக் கட்டண உயர்வு, முத்திரைத் தாள் கட்டண உயர்வு, வழிகாட்டி மதிப்பீடு உயர்வு என்று தமிழ் நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை நசுக்கி வரும் நிர்வாகத் திறமையற்ற திரு. ஸ்டாலின் தலைமையிலான விடியா திமுக அரசுக்கு கடும் கண்டனம் !**

**சட்டம்-ஒழுங்கு சீர்குலைவு :**

எப்போதெல்லாம் திமுக ஆட்சிப் பொறுப்பிற்கு வருகின்றதோ அப்போதெல்லாம் தமிழ் நாட்டில் சட்டம்–ஒழுங்கு சீர்கெட்டுப்போவது வாடிக்கையாகிவிட்டது. கடந்த **43** மாதகால விடியா திமுக ஆட்சியில் சட்டத்தைக் காக்கக்கூடிய காவலர்களின் கைகளைவிட, சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுவோரின் கைகளே ஓங்கி இருக்கின்றன என்பது பல்வேறு கொடுஞ்சம்பவங்கள் மூலம் தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

தமிழ் நாட்டில் கொலை, கொள்ளை, வழிப்பறி, பாலியல் பலாத்காரம், கள்ளச் சாராய மரணங்கள், கஞ்சா, மெத்தபெட்டமைன் போன்ற போதைப் பொருட்கள் உபயோகம், கோவையில் கார் குண்டு வெடிப்பு, காவல் நிலையங்களில் தொடர் மரணங்கள், நடைபயிற்சியின்போது வெட்டிப் படுகொலை, தனிமையில் வாழும் முதியோர்களைக் குறிவைத்து நடக்கும் ஆதாயக் கொலை ஆகிய குற்றச் செயல்கள் அன்றாட நிகழ்வுகளாகத் தொடர்கிறது.

மேலும், இந்த விடியா திமுக ஆட்சியில் சமூக விரோதிகள் எவ்வித அச்சமோ, சட்ட நடவடிக்கைகள் மீதான பயமோ இன்றி குற்றச் செயல்களில் தொடர்ந்து ஈடுபடுகின்றனர்.

விடியா திமுக அரசு பதவியேற்ற நாளில் இருந்து சட்டம்–ஒழுங்கு முற்றிலுமாக சீர்கெட்டும், தமிழகம் போதைப் பொருட்களின் கேந்திரமாக மாறி வருவதைத் தடுப்பதற்கு எந்தவித நடவடிக்கையையும் எடுக்காமலும், சமீபத்தில் பல்லடம் அருகில் நடந்தேறிய **3** பேர் படுகொலை சம்பவம் – விடியா திமுக அரசின் அலட்சியப் போக்கு வெட்டவெளிச்சமாகிய நிலையில், வருங்கால தலைமுறையினரின் வாழ்க்கை சீரழிந்து வருவதற்கும், போதைப் பொருள் கடத்தலால் இந்திய அளவில் தமிழ் நாட்டிற்கு தலைகுனிவு ஏற்பட்டுள்ளதற்கும், இப்பொதுக்குழு கடும் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

### வரி உயர்வு; விலைவாசி உயர்வு :

'நாளொரு மேடை, பொழுதொரு நடிப்பாக' விடியா திமுக அரசு திகழ்கிறது. பொம்மை முதலமைச்சர் திரு. ஸ்டாலின் எதிர்க்கட்சியாக இருக்கும்போது ஒரு பேச்சும்; ஆளுங்கட்சியாக இருக்கும்போது வேறு பேச்சும் பேசுவது வாடிக்கை.

எதிர்க்கட்சியாக இருந்தபோது, 'தாங்கள் ஆட்சிக்கு வந்தால் சொத்து வரியை உயர்த்தமாட்டோம்' என்று உறுதிமொழி. ஆனால், ஆட்சிக்கு வந்தவுடன் பலமடங்கு சொத்து வரியை உயர்த்தி மக்கள் தலையில் சுமத்தினர். மின்கட்டணத்தை மூன்று முறை உயர்த்தியதோடு, மாதாந்திர மின் உபயோக கணக்கெடுப்பு முறையை மறுத்து வருகின்றனர். இந்த ஆட்சியாளர்கள் வீட்டு வரி, குடிநீர் வரி, பால் விலை உயர்வு, மறைமுக பஸ் கட்டண உயர்வு, பத்திரப் பதிவுக் கட்டண உயர்வு, முத்திரைத் தாள் கட்டண உயர்வு, வழிகாட்டி மதிப்பீடு உயர்வு என்று எதையும் விட்டுவைக்கவில்லை.

வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியதைப் போல, கடுமையான விலைவாசி உயர்வு விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்துவிட்டது. அத்தியாவசியப்

பொருட்களின் விலைகளும், கட்டுமானப் பொருட்களின் விலைகளும் பன்மடங்கு உயர்ந்து, மக்களின் வாழ்வாதாரமே கேள்விக்குறியாகிவிட்டது.

நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் விலையில்லா அரிசி தரம் இல்லாததால் கோழி மற்றும் கால்நடைகளுக்கு தீவனமாகப் பயன்படுத்தப்படுவது வெட்கக்கேடான நிகழ்வாகும். நியாய விலைக் கடைகளில் பருப்பு, பாமாயில் வழங்கப்படுவதே இல்லை. விடியா திமுக அரசின் இத்தகைய அலட்சியப் போக்கிற்கு இப்பொதுக்குழு கடும் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

**முன்மொழிபவர்கள்**

**திரு. திண்டுக்கல் C. சீனிவாசன், M.L.A.,**
கழகப் பொருளாளர்
திண்டுக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. R. காமராஜ், M.L.A.,**
கழக அமைப்புச் செயலாளர்
திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. நா. பாலகங்கா, Ex. M.P.,**
கழக அமைப்புச் செயலாளர்
வட சென்னை தெற்கு (மேற்கு) மாவட்டக் கழகச் செயலாளர்
முன்னாள் வாரியத் தலைவர்

**திரு. ப. மோகன்**
கழக அமைப்புச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. K.R. அர்ஜுனன், Ex. M.P.,**
கழக அமைப்புச் செயலாளர்

**திரு. V. ராமு**
கழக அமைப்புச் செயலாளர்

**திரு. B.V. ரமணா**
திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. S.R.K. அப்பு**
வேலூர் மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர்

**திரு. J. சீனிவாசன்**
திருச்சி மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர்
திருச்சி மாநகராட்சி முன்னாள் துணை மேயர்

**திரு. D. ஜாண்தங்கம்**
கன்னியாகுமரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர்

**திரு. S. சரவணபெருமாள்**
கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர்

**திரு. Y. ஜவஹர் அலி**
கழக செய்தித் தொடர்பாளர்

**வழிமொழிபவர்கள் : அனைத்துப் பொதுக்குழு உறுப்பினர்களும்**

## தீர்மானம் – 4

**திமுக தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாமலும்; அரசு ஊழியர்கள் கோரி வரும் பழைய ஓய்வூதியத் திட்டம், ஆசிரியர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் ஆகியோரின் ஊதிய முரண்பாடு, பணி நிரந்தரம் ஆகியவற்றை நிறைவேற்றாமலும்; விவசாயிகள், தொழிலாளர்கள், மீனவர்கள், நெசவாளர்கள் ஆகியோரின் கோரிக்கைகளை நிறைவேற்றாமலும், தொடர்ந்து வஞ்சித்து வரும் விடியா திமுக அரசுக்கு கண்டனம் !**

### i) தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமை :

மக்களை ஏமாற்றி ஆட்சிப் பொறுப்புக்கு வரவேண்டும் என்ற ஒரே குறிக்கோளோடு தேர்தல் வாக்குறுதிகளை அள்ளிவீசி, ஆட்சிக்கு வந்தவுடன் அவற்றை மறந்து, பொய் சொல்வதற்கும் ஓர் அளவு இல்லாமல், திமுக–வின் தலைவர் பொம்மை முதலமைச்சர் திரு. ஸ்டாலின் 'அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றிவிட்டோம்' என்று பேசி மக்களை ஏமாற்றுவதில் கரைகண்டவர் என்பதை ஒவ்வொரு நாளும் நிரூபித்து வருகிறார்.

குறிப்பாக, நீட் தேர்வு ரத்து, கல்விக் கடன் ரத்து, மாதம் ஒருமுறை மின் கணக்கெடுப்பு முறை, பெட்ரோல், டீசல் விலை குறைப்பு, சமையல் எரிவாயு சிலிண்டருக்கு 100/– ரூபாய் மானியம் இப்படி, 520–க்கும் மேற்பட்ட வாக்குறுதிகளை மக்களுக்கு அளித்துவிட்டு, பல்வேறு வாக்குறுதிகளை நிறைவேற்றாமல், '90 சதவீத வாக்குறுதிகளை நிறைவேற்றிவிட்டோம்' என்று பொய் சொல்லியே காலத்தைக் கடத்தி வந்த நிலையில், விடியா திமுக அரசின் பதவிக் காலமே முடியப்போகிறது. இப்படி வாய்ச் சொல் வீரர்களாக வலம் வரும் திமுக ஆட்சியாளர்களுக்கு தமிழக மக்கள் 2026 சட்டமன்றப் பொதுத் தேர்தலில் தக்க பாடம் புகட்டுவார்கள்.

கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாதது மட்டுமல்ல, ஆட்சிக்கு வந்த பிறகாவது அனைத்துத் தரப்பு மக்களின் நியாயமான கோரிக்கைகளையாவது காதுகொடுத்துக் கேட்கிறார்களா என்றால் அதுவும்

இல்லை. மக்களின் கோரிக்கைகள் நிராகரிக்கப்படுவதால், அவர்கள் நிற்கதியாக நிற்கிறார்கள்.

**ii) அரசுப் பணியாளர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமை :**

அரசு அலுவலர்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்துவரும் பழைய ஓய்வூதியத் திட்டம்; ஆசிரியர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வரும் ஊதிய முரண்பாடு, பணி நிரந்தரம் போன்ற கோரிக்கைகள்; மருத்துவர்கள் போராடி வரும் ஊதிய உயர்வு; செவிலியர்கள் பற்றாக்குறையால் ஏற்பட்டிருக்கும் காலிப் பணியிடங்களை நிரப்புதல்; பொதுத் துறை ஊழியர்கள், குறிப்பாக அரசு போக்குவரத்துத் தொழிலாளர்களின் அகவிலைப்படி உயர்வு, பென்ஷன், போனஸ் ஆகியவற்றுக்கான நிரந்தரத் தீர்வு போன்றவை இன்னும் தீர்க்கப்படாமல் இருந்து வருகிறது. இவற்றுக்கெல்லாம் தீர்வுகாண இந்த விடியா திமுக அரசுக்கு மனமும் இல்லை; மார்க்கத்திற்கு வழிதேடவும் இல்லை. இப்படி, ஒவ்வொரு துறையினரும் இந்த விடியா திமுக ஆட்சியில் புறக்கணிக்கப்பட்டு வருவதற்கு, இப்பொதுக்குழு தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

**iii) விவசாயிகள் நலன் :**

- விவசாயிகளுக்கு உரம் குறைந்த விலையில் தரப்படும்; வீட்டிற்கே கொண்டுவந்து தரப்படும் என்று விவசாயிகளை ஏமாற்றிய திரு. ஸ்டாலினின் தலைமையிலான விடியா திமுக அரசுக்கு கண்டனம்.
- தென்னையில் கேரள வாடல் நோய், வெள்ளை ஈ தாக்குதலால் விவசாயிகள் படும் வேதனைக்குத் தீர்வு காணவில்லை.
- மக்காச்சோள பயிர்களைத் தாக்கி அழிக்கும் அமெரிக்கன் படைப் புழு தாக்குதலுக்கு போர்க்கால நடவடிக்கை எடுத்தவர் மாண்புமிகு எடப்பாடியார் அவர்கள். ஆனால் இன்று, கண்டுகொள்ளாமல் கண்ணை மூடிக்கொண்டுள்ள பொம்மை முதலமைச்சர் திரு. ஸ்டாலின் அரசைக் கண்டிக்கின்றோம்.

- ❖ டெல்டா மாவட்ட நெல் கொள்முதலை தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமே குளறுபடி இன்றி செய்திட வேண்டும். மாறாக, மாற்றுத் திட்டம் காண்பது என்பது டெல்டா விவசாயிகளைப் பெரிதும் வஞ்சிக்கும் செயலாகும். அதனை ஒருபோதும் ஏற்க இயலாது என்பதனை பொம்மை முதலமைச்சருக்கு கண்டனமாகத் தெரிவித்துக்கொள்கிறோம்.
- ❖ தேர்தல் வாக்குறுதி அளித்தபடி, நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 2,500/– ம், கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 4,000/–மும் வழங்காத, பொம்மை முதலமைச்சர் திரு. ஸ்டாலின் அரசுக்கு கண்டனம்.

### iv) சிறு, குறு, நடுத்தரத் தொழில்கள் மற்றும் தொழிலாளர்கள் நலன் :

கொரோனா காலகட்டத்தில் இருந்து நசிந்து போயிருக்கும் சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களைக் காப்பாற்ற திமுக அரசு முன்வரவில்லை. இதனால் பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு பயன் தரும் திட்டங்கள் இல்லை.

தொழிலாளர்களின் உரிமைகளுக்குப் பாதுகாப்பான தொழிற்சங்கங்களைக் கூட இந்த அரசு பதிவு செய்ய மறுக்கிறது. அதேசமயம், ஒரு நாளைக்கு 12 மணி நேர வேலை என்பதற்கான சட்டத்தை மட்டும் இயற்றுவதற்கு முனைப்பு காட்டியது திமுக அரசுதான். இத்தகைய தொழிலாளர் விரோத திமுக அரசுக்கு இப்பொதுக்குழு கடும் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

### v) மீனவர்கள் நலன் :

மீனவர்களைப் பாதுகாக்கத் தவறிய அரசாக திரு. ஸ்டாலினின் தலைமையிலான திமுக அரசு இருந்து வருகிறது என்பதற்கு, கச்சத் தீவு மீட்பு குறித்து வாய் திறக்காமல் இருப்பதும், மீனவர்கள் அன்றாடம் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு மீனவர்கள் படகுகளை அரசுடமையாக்கிக்கொள்வதோடு, கோடிக்கணக்கான ரூபாய்களை அபராதமாக

விதிப்பதையும் கண்டுகொள்ளாமல் இருந்து வரும் விடியா திமுக அரசுக்கு இப்பொதுக்குழு கடும் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

நட்பு நாடு என்று சொல்லிக்கொண்டு மீனவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் எடுத்து வருவதை திரும்பப் பெறவும், தற்போது இலங்கை சிறையில் உள்ள மீனவர்களையும், பறிமுதல் செய்யப்பட்ட படகுகளையும் விடுவிக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய அரசை இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

### vi) நெசவாளர்கள் நலன் :

கொஞ்சம் கொஞ்சமாக நசிந்து வரும் நிலையில் இருந்து வரும் நெசவுத் தொழிலை மீட்கவும், நெசவாளர்களைக் காப்பாற்றவும், நூல் விலை ஏற்றம் இல்லாமல் தடையின்றி கிடைத்திடவும், தொடர் உற்பத்திக்கும், வேலை வாய்ப்புக்கும் உத்தரவாதமும், கூலி உயர்வுக்கு ஏற்பாடு செய்யவும் தவறிய அரசாக விடியா திமுக அரசு இருந்து வருவதன்மூலம் நெசவுத் தொழில் அழிந்துவிடுமோ என்று நெசவாளர்கள் மத்தியில் அச்சம் தொடர்கிறது. நெசவாளர்களுக்கான வீடு கட்டும் திட்டத்தை கிட்டத்தட்ட கைவிட்டுவிட்ட விடியா திமுக அரசுக்கு இப்பொதுக்குழு கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

### vii) வணிகர்கள் நலன் :

விலைவாசி உயர்வதற்கு வரி விதித்தலும் ஒரு காரணம். விலைவாசி கட்டுக்குள் இருக்க வேண்டுமென்றால் வணிகர்கள் நலன் அவசியம். தற்போது வணிகக் கடைகளுக்கு 18 சதவீத GST விதித்துள்ளதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்ற வணிகர்களின் கோரிக்கையை ஏற்று, மத்திய அரசுக்கு வலியுறுத்த வேண்டிய நிலையில் இருக்கும் விடியா திமுக அரசு, அதுகுறித்து வாய்மூடி மௌனம் காக்கும் மெத்தனப் போக்கு மிகவும் கண்டிக்கத்தக்கது.

இப்படி, மக்களின் நலன்களில் சிறிதும் அக்கறை செலுத்தாமல், தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றாதது; அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், பொதுத் துறை ஊழியர்கள் ஆகியோர் நலனில் அக்கறை காட்டாதது என விவசாயிகள், தொழிலாளர்கள், மீனவர்கள், நெசவாளர்கள், வணிகர்கள் ஆகியோரையும், தொடர்ந்து வஞ்சித்து வரும் விடியா திமுக அரசுக்கு இப்பொதுக்குழு கடும் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

**முன்மொழிபவர்கள்**

**திரு. நத்தம் இரா. விசுவநாதன், M.L.A.,**
கழக துணைப் பொதுச் செயலாளர்
திண்டுக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. O.S. மணியன், M.L.A.,**
கழக அமைப்புச் செயலாளர்
நாகப்பட்டினம் மாவட்டக் கழகச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**முனைவர் எஸ்.எஸ். வைகைச்செல்வன்**
கழக இலக்கிய அணிச் செயலாளர்
கழக செய்தித் தொடர்புச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. முக்கூர் N. சுப்பிரமணியன்**
கழக அமைப்புச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. திருப்பூர் C. சிவசாமி, Ex. M.P.,**
கழக அமைப்புச் செயலாளர்

**திரு. ராயபுரம் R. மனோ**
கழக அமைப்புச் செயலாளர்

**திரு. S.P. சண்முகநாதன்**
தூத்துக்குடி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. த. வேலழகன்**
வேலூர் புறநகர் மாவட்டக் கழகச் செயலாளர்

**திரு. ப. குமார், Ex. M.P.,**
திருச்சி புறநகர் தெற்கு
மாவட்டக் கழகச் செயலாளர்

**திரு. A. அன்பழகன், Ex. M.L.A.,**
புதுச்சேரி மாநிலக் கழகச் செயலாளர்

**பேராசிரியர் முனைவர் சா. கலைப்புனிதன்**
கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர்

**வழக்கறிஞர் திருமதி அ. சசிரேகா**
கழக செய்தித் தொடர்பாளர்
கழக வழக்கறிஞர் பிரிவு துணைச் செயலாளர்

**வழிமொழிபவர்கள் : அனைத்துப் பொதுக்குழு உறுப்பினர்களும்**

## தீர்மானம் – 5

**டங்ஸ்டன் சுரங்கம் தமிழகத்தில் மேலூருக்கு அருகில் கொண்டுவர மத்திய அரசு ஒப்பந்தப் புள்ளி கோரியபோதே, 10 மாதகாலம் அவகாசம் இருந்த நிலையிலும் அவற்றைத் தடுக்கத் தவறிய திரு. ஸ்டாலின் தலைமையிலான விடியா திமுக அரசுக்கும்; நாடாளுமன்றத்தில் இச்சட்டம் கொண்டுவரும்போதும், அதற்குப் பிறகும் திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் போதிய அழுத்தம் கொடுத்து தடுக்கத் தவறிவிட்ட திமுக தலைவர் திரு. ஸ்டாலினுக்கும் கடும் கண்டனம்!**

**தமிழகத்தில் மதுரை மாவட்டம், மேலூர் அருகில் டங்ஸ்டன் சுரங்கம் அமைவதை மத்திய அரசு கைவிடுமாறு வலியுறுத்தல் !**

மதுரை மாவட்டம், மேலூர் தாலுகாவில் உள்ள எட்டிமங்கலம், நாயக்கர்பட்டி, அரிட்டாபட்டி ஆகிய இடங்களில் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்க மத்திய அரசு தனியார் நிறுவனத்திற்கு ஏலம் விட்டுள்ளது.

இப்பகுதிகளில் தமிழில் கல்வெட்டுகள், சமணர் படுக்கைகள், 2200 ஆண்டுகள் பழமையான குடவரைக் கோவில்கள், 7 சிறு குன்றுகள் தொடர்ச்சியாக இப்பகுதியில் அமைந்துள்ளன. மேலும், 72 ஏரிகள், 200 இயற்கை நீரூற்று குளங்கள் மற்றும் 3 தடுப்பணைகள் உள்ளதாகவும், வெள்ளை வல்லூறு, செம்மார்பு வல்லூறு, பாம்புண்ணிக் கழுகு உட்பட 250 பறவைகளும், அலங்கு மலைப்பாம்பு, தேவாங்கு போன்ற உயிரினங்களும் இங்கு காணப்படுகின்றன. சுரங்க அமைச்சகத்தின் அறிவுரையின்படி, இங்குள்ள கலிஞ்சா மலை, நாட்டார் மலை, ராமாயி மலை, அகப்பட்டான் மலை, கழுகு மலை, தேன்கூடு மலை ஆகியவை டங்ஸ்டன் கனிம வளத்துக்குள் வருவதாகக் கூறப்படுகிறது. சூழல் முக்கியத்துவம் வாய்ந்த இப்பகுதியில் சுரங்கம் அமைக்கப்பட்டால் இயற்கை நீர்ச்சுனைகள் அழிந்துபோவதோடு, மேற்கண்ட வரலாற்றுச் சூழல்களுக்கும், உயிரினங்களுக்கும் பாதிப்பு ஏற்படும் என்பதை மாநில அரசும், மத்திய அரசும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

5 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் டங்ஸ்டன் கனிமச் சுரங்கம் அமைக்க மத்திய அரசு, வேதாந்தா தொழில் நிறுவனத்தின் இந்துஸ்தான் ஜிங்க் நிறுவனத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது மிகுந்த வேதனையைத் தருகிறது. அரிட்டாபட்டி பல்லுயிர்ப் பாரம்பரியத் தலமாக இருக்கின்ற நிலையில், இங்கு சுரங்கம் அமைத்தால், இருக்கின்ற பல்லுயிர்ப் பெருக்கத்திற்கு ஆபத்து நேர்வதோடு விவசாயம் பாதிக்கும் என தொடர்ந்து பொதுமக்கள் வலியுறுத்தியும், டங்ஸ்டன் கனிமச் சுரங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றார்கள்.

மறைந்த திரு. கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது, அன்று துணை முதலமைச்சராகவும், தொழில் துறை அமைச்சராகவும் இருந்த திரு. ஸ்டாலின், மீத்தேன், ஹைட்ரோகார்பன் திட்டத்திற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்தார். பொதுமக்கள் கடும் அதிருப்தியும், போராட்டமும் அறிவித்ததற்குப் பிறகு, பெரும் எதிர்ப்பு கிளம்பிய சூழ்நிலையில், அதற்கு நான் ஒப்புதலே தரவில்லை; கையெழுத்தே இடவில்லை என்று பின்வாங்கியவர்தான் இன்றைய விடியா திமுக அரசின் முதலமைச்சர் திரு. ஸ்டாலின்.

அதைப் போலவே, தற்போது டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுத்தபோது அமைதியாக இருந்துவிட்டு, போராட்டம் பெரிதாக வெடித்த காரணத்தினால் இப்போது, விடியா திமுக அரசு சுரங்கம் அமைக்க வேண்டாம் என்கிற எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுத்திருக்கிறதோ என்ற ஐயப்பாடு எழுகிறது. விடியா திமுக அரசின் முதலமைச்சர் திரு. ஸ்டாலினின் உறுதியற்ற நடவடிக்கையைக் கண்டு மக்கள் கொதித்துப் போயிருக்கிறார்கள்.

மேலும், மக்கள் போராட்டத்திற்குப் பிறகு, வேறு வழியின்றி மதுரை மேலூரில் டங்ஸ்டன் சுரங்க ஏலத்தை கைவிடக் கோரி காலம் கடந்து பிரதமருக்கு முதலமைச்சர் திரு. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

விடியா திமுக அரசு வாய்மூடி மவுனியாக இருந்துவிட்டு, தற்போது விழித்துக்கொண்டு எதுவும் தெரியாததைப் போல சட்டமன்றத்தில் தனித் தீர்மானத்தை ஒப்புக்குக் கொண்டுவந்துள்ளது. ஆரம்ப காலத்திலேயே ஒப்பந்தப் புள்ளி கோரும்போதே, இந்த விவரத்தை மத்திய அரசுக்குத் தெரிவித்திருந்தால் ஏலத்தைத் தடுத்திருக்கலாம்.

கடந்த பிப்ரவரி மாதத்தில் ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டு, 7.11.2024 அன்று ஏலம் இறுதி செய்யப்படும் வரை, 10 மாதங்களாக விடியா திமுக அரசு எதுவும் செய்யவில்லை. நாடாளுமன்றத்தில் திருத்த மசோதா கொண்டுவரும்போது, இச்சட்ட நிறைவேற்றத்தைத் தடுக்கத் தவறியதும், அதன் பிறகும் திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் போதிய அழுத்தத்தைத் தரவில்லை என்பதும் வெட்கக்கேடான ஒன்றாகும்.

'வரும் முன் காக்க வேண்டும்' என்ற எச்சரிக்கை நடவடிக்கை இல்லாமல் டங்ஸ்டன் பிரச்சனையில் முதலமைச்சரின் உறுதியற்ற நிலைப்பாட்டையும், இரட்டைவேடம் போடும் விடியா திமுக அரசின் போக்கையும் இப்பொதுக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

இனியாவது, விடியா திமுக அரசு இந்த விவகாரத்தில் அதிக கவனம் செலுத்தி, அத்திட்டம் செயல்பாட்டுக்கு வராமல் தடுத்து நிறுத்துவதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று இப்பொதுக்குழு திமுக அரசை வலியுறுத்துகிறது.

எனவே, மக்கள் நலன் கருதி மதுரை மாவட்டத்தில் டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கான நடவடிக்கையை கைவிட வேண்டும் என்று மத்திய அரசை இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

**முன்மொழிபவர்கள்**

**திரு. C. பொன்னையன்**
அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்றச் செயலாளர்
கழக செய்தித் தொடர்பாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. சேவூர் S. இராமச்சந்திரன், M.L.A.,**
கழக அமைப்புச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. A.K. செல்வராஜ், M.L.A.,**
கழக அமைப்புச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. M. புத்திச்சந்திரன்**
கழக அமைப்புச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. எஸ். இராமச்சந்திரன்**
திருவண்ணாமலை கிழக்கு
மாவட்டக் கழகச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. இளம்பை இரா. தமிழ்ச்செல்வன், Ex. M.L.A.,**
பெரம்பலூர் மாவட்டக் கழகச் செயலாளர்

**திரு. S. அய்யாத்துரைபாண்டியன்**
கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர்

**திரு. செஞ்சி ந. ராமச்சந்திரன்**
கழக அமைப்புச் செயலாளர்
முன்னாள் மத்திய அமைச்சர்

**திரு. துரை. செந்தில்**
கழக அமைப்புச் செயலாளர்

**திரு. சு. ரவி, M.L.A.,**
ராணிப்பேட்டை கிழக்கு
மாவட்டக் கழகச் செயலாளர்

**திரு. V. ஓமலிங்கம், Ex. M.L.A.,**
காரைக்கால் மாவட்டக் கழகச் செயலாளர்

**திரு. குறளார் மு. கோபிநாதன்**
கழக செய்தித் தொடர்பாளர்

**வழிமொழிபவர்கள் : அனைத்துப் பொதுக்குழு உறுப்பினர்களும்**

## தீர்மானம் – 6

i) **உலகப் பொதுமறையாகவும், இந்தியாவுக்கு வாழ்வியல் வழிகாட்டியாகவும், தமிழகத்திற்கு காலம் வழங்கிய கொடையாகவும் திகழ்கின்ற திருக்குறளை தேசிய நூலாக அறிவித்திட மத்திய அரசை வலியுறுத்துதல்!**

ii) **சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாக தமிழ் இடம்பெற வலியுறுத்தல்!**

iii) **இந்தித் திணிப்புக்கு எதிர்ப்பு – மத்திய அரசால் இயற்றப்படும் சட்டங்களின் பெயர்களுக்கு இந்தியில் பெயர் வைப்பதைக் கைவிட்டு, ஆங்கிலத்திலேயே தொடர மத்திய அரசுக்கு வலியுறுத்தல் !**

**i)** “அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்’’ என்று அவ்வையாரும், “வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்டது தமிழ் நாடு’’ என்று மகாகவி பாரதியாரும் பெருமை பொங்க பாராட்டி மகிழ்ந்த, திருவள்ளுவரால் இயற்றப்பட்ட வாழ்வியல் இலக்கியம் திருக்குறளை உலகப் பொதுமறையாகப் போற்றிப் புகழப்பட்டு வருகிறது.

உலகிலேயே அதிகமான மொழிகளில், மொழிபெயர்க்கப்பட்ட தனிப்பெரும் சிறப்பு திருக்குறளுக்கே உரியது. ஜாதி, மத, இன பேதங்களுக்கு அப்பாற்பட்டு அனைவருக்கும் அறத்தையும், பொது நீதியையும் உரைக்கும் சிறப்பு வாய்ந்த நூல் திருக்குறளாகும். மனித வாழ்வியலுக்கு வழிகாட்டும் நூலாகவும், காலத்தால் அழியாத கருத்துகளை உலகத்திற்குத் தந்திருக்கும் மகத்தான நூலாகவும் இன்றுவரை திகழ்ந்து வருகிறது. எக்காலத்துக்கும் பொதுவான கருத்துகளையும், இக்காலத்துக்கும் பொருந்தும் விதமாகவும் அமைக்கப்பட்ட உன்னத நூல் திருக்குறள் மட்டும்தான்.

2004–ஆம் ஆண்டு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அப்போதைய பாரதப் பிரதமரிடம் அளித்திட்ட கோரிக்கையின் அடிப்படையில், உலகப் பொதுமறையாகவும், இந்தியாவுக்கு வாழ்வியல் வழிகாட்டியாகவும், தமிழகத்திற்கு காலம் வழங்கிய கொடையாகவும் திகழ்கின்ற திருக்குறளை, தேசிய நூலாக அறிவிக்க வேண்டும் என்று, அதன் பெருமை பேசி மகிழும் பாரதப் பிரதமர் அவர்களை இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

ii) சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாக ஆங்கிலம் இருந்து வருகிறது. தமிழ் நாட்டின் ஆட்சி மொழியாக தாய் மொழியாம் தமிழ் இருக்கும் நிலையில், சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாக தமிழ் மொழி இடம்பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நீதிமன்ற கொலீஜியத்தையும், மத்திய அரசையும் இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

iii) அரசமைப்புச் சட்ட 8–ஆவது அட்டவணையில் இடம்பெற்றுள்ள 22 மொழிகளில் இந்தியும் ஒன்று. மும்மொழித் திட்டத்தை கொள்கையாகக் கொண்ட மத்திய அரசின் அலுவல் மொழியாக இந்தி இருந்து வந்தபோதும், தமிழ் நாட்டைப் பொறுத்தவரை 1976–ஆம் ஆண்டு ஆட்சிமொழி சட்டத்தின்படி அச்சட்டத்தில் இருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டு, இருமொழிக் கொள்கையே தமிழ் நாட்டில் அமலில் இருந்து வருகிறது. இந்த நிலையில் மத்திய அரசால் இயற்றப்படும் சட்டங்களுக்கு இந்தியிலும், சமஸ்கிருதத்திலும் பெயர் வைப்பது என்பது மறைமுகமாக இந்தியைத் திணிக்கும் முயற்சியாகத் தான் கருத வேண்டி இருக்கிறது. ஏற்கெனவே, மத்திய அரசு மூன்று குற்றவியல் சட்டங்களின் பெயர்கள் ஆங்கிலத்தில் இருந்து வந்ததை மாற்றம் செய்தது மிகவும் கண்டிக்கத்தக்கது.

மத்திய அரசு தற்போது இயற்றும் புதிய சட்டங்களுக்கும் இந்தியிலும், சமஸ்கிருதத்திலும் பெயர் வைப்பது தொடர்கிறது. எனவே, மத்திய அரசின் சட்டங்களின் பெயர்கள் ஆங்கிலத்திலேயே தொடர வேண்டும் என்பது உறுதி செய்யப்பட வேண்டும் என்று மத்திய அரசை இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

## முன்மொழிபவர்கள்

**டாக்டர் மு. தம்பிதுரை, M.P.,**
கழக கொள்கை பரப்புச் செயலாளர்
முன்னாள் மத்திய அமைச்சர்

**திரு. கரூர் M. சின்னசாமி**
கழக அமைப்புச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. V.S. சேதுராமன்**
கழக வழக்கறிஞர் பிரிவுத் தலைவர்

**திரு. G. பாஸ்கரன்**
கழக அமைப்புச் செயலாளர், முன்னாள் அமைச்சர்

**திரு. V. மருதராஜ்**
கழக அமைப்புச் செயலாளர்
திண்டுக்கல் மாநகராட்சி முன்னாள் மேயர்

**திரு. R. காந்தி**
கழக அமைப்புச் செயலாளர்

**திரு. M. பரஞ்ஜோதி**
திருச்சி புறநகர் வடக்கு
மாவட்டக் கழகச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. S.M. சுகுமார்**
ராணிப்பேட்டை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர்

**திரு. R.K. பாரதிமோகன், Ex. M.P.,**
தஞ்சாவூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர்

**டாக்டர் அம்புரோஸ் வில்சன்**
ஆந்திர மாநிலக் கழகச் செயலாளர்

**திரு. துரை திருஞானம்**
கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர்

**திரு. R. அண்ணாதுரை, Ex. MLA.,**
கழக செய்தித் தொடர்பாளர்

**வழிமொழிபவர்கள் : அனைத்துப் பொதுக்குழு உறுப்பினர்களும்**

## தீர்மானம் – 7

**மக்களுக்கான திட்டங்களைத் தீட்டி அவைகளை செயல்படுத்துவதற்கு நிதி ஒதுக்காமல்; திட்டமிடல் எதுவுமின்றி விளம்பரத்திற்காக 'ஃபார்முலா 4' கார் பந்தயம் நடத்துதல்; வரைமுறையின்றி சிலைகள் வைத்தல்; பூங்காக்கள் அமைத்தல்; பேனா நினைவுச் சின்னம்; பலகோடி ரூபாய் மதிப்பீட்டில் பன்னாட்டு கூட்ட அரங்கம் கட்டுதல் போன்றவற்றிற்கு முன்னுரிமை கொடுத்து, ஆடம்பர செலவு செய்து, மக்கள் நலன்களை பின்னுக்குத் தள்ளி அரசு நிதியை வீணடிக்கும் விடியா திமுக அரசுக்கு கடும் கண்டனம்!**

கடந்த 43 மாதகால திரு. ஸ்டாலின் தலைமையிலான விடியா திமுக ஆட்சியில், மக்கள் நலன் சார்ந்த திட்டங்கள் எதுவும் செயல்படுத்தப்படவில்லை; சொல்லும்படியான சாதனைகள் எதுவும் இல்லை. முதலமைச்சர், துணை முதலமைச்சர் உள்ளடங்கிய குடும்ப திமுக ஆட்சியில், மக்களுக்கு வேதனைதான் மிஞ்சி இருக்கிறது.

மக்கள் நலன் சார்ந்த திட்டங்களுக்கு நிதி ஒதுக்காமல், வெற்று அறிவிப்புகளை மட்டுமே வெளியிட்டு, அவற்றிற்கு அரசு நிதியை வீணடிக்கும் போக்குதான் இன்றைய நிலையில் தொடர்கிறது.

உதாரணமாக, சென்னையில், இந்த ஆட்சியில் அங்கம் வகிக்கும் துணை முதலமைச்சரால் 'ஃபார்முலா 4' கார் பந்தயம் நடத்தப்பட்டது. அந்த நிகழ்ச்சிக்கு ஒதுக்கப்பட்ட நிதி 48 கோடி ரூபாயாகும். இதுபோன்ற பந்தயங்கள் நடத்துவதற்கான இடம் இருங்காட்டுக்கோட்டையில் இருந்தும், பொதுமக்களுக்கு இடைஞ்சலாகவும், போக்குவரத்துக்கு இடையூறாகவும் இருந்த நிலையில் நடத்தப்பட்ட அந்த நிகழ்ச்சி, மக்களை முகம் சுளிக்க வைத்ததே தவிர, அது மக்களின் நலனுக்கானதல்ல. முன்னுரிமை கொடுக்க வேண்டிய விஷயங்களுக்கு முன்னுரிமை கொடுக்காமல், விடியா திமுக அரசு வரைமுறை இல்லாமல் சிலைகள்

நிறுவுவதிலும், பூங்காக்கள் அமைப்பதிலும், 84 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பேனா நினைவுச் சின்னம் அமைப்பதிலும் தான் முனைப்பு காட்டுகிறது. 487 கோடி ரூபாயில் முட்டுக்காட்டில் பன்னாட்டு கூட்ட அரங்கு அமைப்பது போன்ற செயல்களில் தான் விடியா திமுக அரசு அக்கறை காட்டுகிறது. மக்கள் நலத் திட்டங்கள் முற்றிலுமாக புறக்கணிக்கப்படுகிறது.

'புளியேப்பக்காரனுக்கு பாயாசம் கொடுப்பதைவிட, பசியேப்பக்காரனுக்கு கூழ் கொடுப்பதுதான் முன்னுரிமையாக இருக்க வேண்டும்' என்ற அடிப்படை ஞானம் கூட இல்லாமல் தான்தோன்றித்தனமாக ஓர் அரசு செயல்படக்கூடாது. ஆடம்பர செலவுகளைத் தவிர்த்து, அவசியத் திட்டங்களுக்கான செலவுகளுக்கு நிதி ஒதுக்குவதை முன்னுரிமையாகக் கொண்டு அரசு செயல்பட வேண்டும்.

மக்கள் நலனைப் புறக்கணித்து, ஆடம்பர விஷயங்களுக்கு வீண் செலவு செய்வதையே பொழுதுபோக்காகக் கொண்டு செயல்படும் திரு. ஸ்டாலினின் விடியா திமுக அரசை இப்பொதுக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

எஞ்சியுள்ள ஆட்சிக் காலத்திலாவது, மக்களுக்குத் தேவையான அத்தியாவசியத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கி செயல்படுத்துவதில் அக்கறை காட்ட வேண்டும் என்று திரு. ஸ்டாலினின் விடியா திமுக அரசை இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

**முன்மொழிபவர்கள்**

**திரு. K.A. செங்கோட்டையன், M.L.A.,**
கழக அமைப்புச் செயலாளர்
ஈரோடு புறநகர் மேற்கு
மாவட்டக் கழகச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**டாக்டர் C. விஜயபாஸ்கர், M.L.A.,**
கழக அமைப்புச் செயலாளர்
புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. ஆர். கமலக்கண்ணன்**
அண்ணா தொழிற்சங்கப் பேரவைச் செயலாளர்

**திரு. அ. அன்வர்ராஜா, Ex. M.P.,**
கழக அமைப்புச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. P.G. ராஜேந்திரன், Ex. M.L.A.,**
கழக அமைப்புச் செயலாளர்

**திரு. I. மகேந்திரன், Ex. M.L.A.,**
கழக அமைப்புச் செயலாளர்

**திரு. P. பாலகிருஷ்ணா ரெட்டி**
கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. தூசி K. மோகன், Ex. M.L.A.,**
திருவண்ணாமலை வடக்கு
மாவட்டக் கழகச் செயலாளர்

**திரு. M. ரெத்தினசாமி, Ex. M.L.A.,**
தஞ்சாவூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர்

**திரு. A.A. பாண்டியன்**
தெலுங்கானா மாநிலக் கழகச் செயலாளர்

**திரு. ஆ. இளவரசன், Ex. MP.,**
கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர்

**அப்சரா ரெட்டி**
கழக செய்தித் தொடர்பாளர்

**வழிமொழிபவர்கள் : அனைத்துப் பொதுக்குழு உறுப்பினர்களும்**

## தீர்மானம் – 8

**கழக ஆட்சியின்போது குடிமராமத்துத் திட்டம், தடுப்பணைகள் திட்டம், அணைகள், ஏரிகள், குளங்கள் மற்றும் நீர்நிலைகளை ஆழப்படுத்தி நீரை சேமிக்கும் திட்டம் ஆகியவை நிறைவேற்றப்பட்டதை, விடியா திமுக அரசு தொடர்ந்து செயல்படுத்தத் தவறியதற்கு கண்டனம் !**

நீர்வளத்தைப் பெருக்குவதும், நீர் மேலாண்மையை சிறப்பாக கையாளுவதும் தான் ஓர் அரசின் மிக முக்கிய கடமை.

மாண்புமிகு எடப்பாடியார் அவர்கள் தலைமையிலான கழக ஆட்சியில் இவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் குடிமராமத்துத் திட்டம், தடுப்பணைகள் கட்டும் திட்டம், அணைகள், ஏரிகள், குளங்கள் மற்றும் நீர்நிலைகளை ஆழப்படுத்தி அதிக அளவில் நீரை சேமிக்கும் திட்டம் முதலானவை நிறைவேற்றப்பட்டது. இதன் காரணமாக நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்தது. ஆனால், அதன் பிறகு ஆட்சிக்கு வந்த விடியா திமுக அரசு இதில் எந்தவித அக்கறையும் காட்டவில்லை.

### i) அத்திக்கடவு–அவிநாசி திட்டம் :

கழக ஆட்சியில் தொடங்கி, முடிக்கப்பட்ட அத்திக்கடவு–அவிநாசி திட்டத்தை செயல்பாட்டுக்கு கொண்டுவருவற்குக் கூட ஆமை வேகத்தில் செய்து, திமுக அரசு காலம் தாழ்த்தி வருகிறது. கழக அரசு கொண்டுவந்த திட்டம் என்பதால் அரசியல் காழ்ப்புணர்ச்சியுடன் இத்திட்டத்தை திமுக அரசு வேண்டுமென்றே காலம் தாழ்த்தி வருகிறதோ என்ற சந்தேகம் எழுகிறது. எனவே, எஞ்சியுள்ள பணிகளை விரைந்து முடித்து, அத்திட்டத்தை செயல்பாட்டுக்குக் கொண்டுவர வேண்டும் என்று இப்பொதுக்குழு விடியா திமுக அரசை வலியுறுத்துகிறது.

### ii) காவிரி–குண்டாறு–வைகை இணைப்புத் திட்டம் :

காவிரி–குண்டாறு–வைகை இணைப்புத் திட்டத்தினை மாண்புமிகு எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அரசானது, இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து பணிகளைத் துவக்கிய நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, அத்திட்டம் விடியா திமுக அரசால் காழ்ப்புணர்ச்சி காரணமாக கிடப்பில் போடப்பட்டுவிட்டது. ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த மக்களின் உயிர் நாடியான இத்திட்டத்தை, அம்மாவட்டங்களைச் சேர்ந்த மக்களின் நலன் கருதி தொடர்ந்து நிறைவேற்றிட விடியா திமுக அரசை இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

### iii) முல்லைப் பெரியாறு அணை பிரச்சனைக்குத் தீர்வு :

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு எடுத்த நடவடிக்கை, சட்டப் போராட்டம் காரணமாக, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்த உச்சநீதிமன்றத்தின் உத்தரவைப் பெற்றது. ஆனாலும், அதற்கு எந்தெந்த வகைகளில் இடையூறு செய்ய முடியுமோ அவ்வளவு இடையூறுகளையும் கேரள அரசு செய்து வருகிறது. அணை பலமிழந்து இருப்பதாகச் சொல்லி, புதிய அணை கட்டும் கேரள அரசின் முயற்சியை முறியடித்தது கழக அரசு. அணையின் உறுதித் தன்மையைக் காக்க பேபி அணையை பலப்படுத்தும் வகையில் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள கழக ஆட்சியில் நடவடிக்கை எடுத்து, அப்பணி தொடரப்பட்டு வந்த நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, ஆட்சிக்கு வந்த விடியா திமுக அரசு, கேரளாவில் தங்கள் கூட்டணியில் இருக்கும் ஆளும் கட்சி என்ற நிலையில் பேச்சுவார்த்தை மூலமாகக்கூட எந்தவித முயற்சியையும் எடுக்கவில்லை. ‘பார்க்கப் போகிறோம்; பேசப் போகிறோம்’ என்று சாக்கு போக்கு சொல்லியே காலம் கடத்துகிறது திமுக அரசு. தற்போது பேபி அணையின் பராமரிப்பு பணிகளைக்கூட செய்யவிடாமல் தடுத்துவரும் கேரள அரசுக்கு இப்பொதுக்குழு கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு, விடியா திமுக அரசு சட்ட ரீதியாகவோ,

பேச்சுவார்த்தை மூலமாகவோ இப்பிரச்சனைக்கு விரைந்து தீர்வுகாண வேண்டும் என்று இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

### iv) நடந்தாய் வாழி காவேரி திட்டம் :

'நடந்தாய் வாழி காவேரி திட்டம்' மாண்புமிகு எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் திட்டமிடப்பட்டு, விரிவான திட்ட அறிக்கையும் தயார் செய்யப்பட்டு மத்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், இத்திட்டம் விடியா திமுக ஆட்சியில் முடக்கப்பட்டுவிட்டது. எனவே, இத்திட்டத்திற்கு புத்துயிர் கொடுக்கும் வகையில் மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்த விடியா திமுக அரசை இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

### v) சரபங்கா உபரிநீர் நீரேற்றுத் திட்டம் :

மேட்டூர் அணையில் இருந்து வெள்ள காலங்களில் வெளியேறும் உபரி நீர் வீணாகக் கடலில் கலப்பதைக் கருத்தில்கொண்டு, நீரேற்றுத் திட்டத்தின் மூலம் வானம் பார்த்த பூமியாக இருக்கும் பகுதிகளில் உள்ள 100 வறண்ட ஏரிகளை நிரப்பும் திட்டத்தை அறிவித்து, அதற்கு நிதி ஒதுக்கீடு செய்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேயே முதல்கட்டமாக ஆறு, ஏரிகளை நிரப்பும் பணி மாண்புமிகு எடப்பாடியார் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. பின்னர், ஆட்சி மாற்றம் ஏற்பட்ட நிலையில், அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக 43 மாதங்களாக ஆமை வேகத்தில் இப்பணிகள் நடக்கின்றன. எனவே, மீதமுள்ள பணிகளை முழுமையாக நிறைவேற்றத் தவறிய விடியா திமுக அரசுக்கு கண்டனத்தைத் தெரிவிப்பதோடு, இத்திட்டத்தை முழு வீச்சில் செய்து முடிக்க இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

### vi) கால்நடைப் பூங்காவை செயல்பாட்டுக்குக் கொண்டுவர வலியுறுத்தல் :

சேலம் மாவட்டம், தலைவாசல் கூட்டு ரோட்டில், கழக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட 1,000 கோடி ரூபாய் மதிப்பிலான சுமார் 1,000 ஏக்கர் நிலப் பரப்பில் கழக ஆட்சியில் கட்டி முடிக்கப்பட்டு, செயல்பாட்டுக்காக தொடங்கி வைக்கப்பட்ட நிலையில், அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக

விடியா திமுக அரசு அத்திட்டத்தை முடக்கிவிட்டது. விவசாயிகளின் நன்மை கருதியும், கால்நடை வளர்ப்பில் ஆராய்ச்சி மூலம் கலப்பின பசுக்களை உருவாக்கி அவற்றின் வாயிலாக பால் உற்பத்தியைப் பெருக்கவும் திட்டமிட்டு கொண்டுவரப்பட்ட திட்டம் தற்போது முடங்கிக் கிடக்கிறது; ஆராய்ச்சிப் பணிகளும் தொடங்கப்படவில்லை. விடியா திமுக அரசின் இத்தகைய போக்கிற்கு எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விடியா திமுக அரசு காழ்ப்புணர்ச்சியைக் கைவிட்டுவிட்டு, இத்திட்டத்தை முனைப்போடு செயல்பாட்டுக்குக் கொண்டுவர இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

## முன்மொழிபவர்கள்

**திரு. பி. தங்கமணி, M.L.A.,**
கழக அமைப்புச் செயலாளர்
நாமக்கல் மாவட்டக் கழகச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. கடம்பூர் C. ராஜு, M.L.A.,**
கழக அமைப்புச் செயலாளர்
தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திருமதி மைதிலி திருநாவுக்கரசு, Ex. M.L.A.,**
கழக அமைப்புச் செயலாளர்

**திரு. சி.த. செல்லப்பாண்டியன்**
கழக வர்த்தக அணிச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. திருத்தணி கோ. அரி, Ex. M.P.,**
கழக அமைப்புச் செயலாளர்

**திரு. திருவேற்காடு பா. சீனிவாசன்**
கழக அமைப்புச் செயலாளர்

**திரு. தாமரை S. ராஜேந்திரன்**
அரியலூர் மாவட்டக் கழகச் செயலாளர்
அரசு தலைமை முன்னாள் கொறடா

**திருமதி L. ஜெயசுதா, Ex. M.L.A.,**
திருவண்ணாமலை மத்திய
மாவட்டக் கழகச் செயலாளர்

**திரு. M. சேகர்**
தஞ்சாவூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர்

**திரு. R. கணேஷ்**
மகாராஷ்டிர மாநிலக் கழகச் செயலாளர்

**திரு. கோபி காளிதாஸ்**
கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர்

**பேராசிரியர் ச. கல்யாணசுந்தரம்**
கழக செய்தித் தொடர்பாளர்

**வழிமொழிபவர்கள் : அனைத்துப் பொதுக்குழு உறுப்பினர்களும்**

## தீர்மானம் – 9

**தமிழ் நாடு தண்ணீர் பற்றாக்குறை கொண்ட மாநிலம். அதனால், விவசாயம் மற்றும் குடிநீர் தேவைக்காக அண்டை மாநிலங்களை நம்பியிருக்க வேண்டியுள்ளது. கழக ஆட்சியில் தொலைநோக்குப் பார்வையோடு கோதாவரி–காவிரி இணைப்புத் திட்டம் மற்றும் பரம்பிக்குளம் ஆழியாறு, பாண்டியாறு–புன்னம்புழா ஆகிய திட்டங்களையும், தொடர் நடவடிக்கை எடுத்து செயல்படுத்தத் தவறிய விடியா திமுக அரசுக்குக் கண்டனம் !**

தமிழ் நாடு இயற்கையாகவே நீர் பற்றாக்குறை மாநிலமாகும். விவசாயம் மற்றும் குடிநீர் தேவைக்கு அண்டை மாநிலங்களை நம்பியிருக்க வேண்டியுள்ளது. இதை கருத்தில் கொண்டுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தொலைநோக்குப் பார்வையோடு தமிழக மக்களுக்கு நிரந்தரத் தீர்வு கிடைத்திட கோதாவரி–காவிரி இணைப்புத் திட்டத்தை முன்னெடுத்து, திட்டம் முழுமையாகப் பயன்பெறும் வகையில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மத்திய அரசின் உதவியோடு செயல்படுத்த வேண்டிய நிலையில், மாண்புமிகு எடப்பாடியார் அவர்கள் தலைமையிலான ஆட்சியில், பாரதப் பிரதமருக்கு அழுத்தம் கொடுத்து, அதன் தொடர்ச்சியாக ஒரு குழு அமைக்கப்பட்டு, அக்குழு சம்மந்தப்பட்ட தெலுங்கானா, ஆந்திர மாநிலங்களின் அன்றைய முதலமைச்சர்களைச் சந்தித்து அவர்களின் இசைவைப் பெற்று, குறைந்தபட்ச கால அவகாசத்தில் திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்த நிலையில், ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு, ஆட்சிப் பொறுப்புக்கு வந்த திரு. ஸ்டாலின் தலைமையிலான விடியா திமுக அரசு இத்திட்டம் குறித்த தொடர் நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை.

அதைப் போலவே, பரம்பிக்குளம்–ஆழியாறு மற்றும் பாண்டியாறு–புன்னம்புழா ஆகிய இரண்டு திட்டங்களையும் செயல்படுத்த கேரள மாநில முதலமைச்சரை சந்தித்து, கோவை, திருப்பூர், ஈரோடு ஆகிய மாவட்டங்களின் விவசாய மேம்பாட்டிற்காக விரைந்து செயல்படுத்தத் தேவையான

நடவடிக்கைகளை மாண்புமிகு எடப்பாடியார் அவர்கள் தலைமையிலான கழக அரசு எடுத்தது. ஆட்சிமாற்றம் ஏற்பட்ட நிலையில் அத்திட்டமும், அத்திட்டத்திற்கான நடவடிக்கையும், செயலற்ற விடியா திமுக ஆட்சியில் தொடரப்படவில்லை. தமிழ் நாட்டின் எதிர்கால நலனில் அக்கறை கொஞ்சமும் இல்லாத திரு. ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு கும்பகர்ணன் தூக்கத்தில் இருந்து இன்னமும் விழித்து எழாதது மிகவும் கண்டனத்திற்குரியது.

எனவே, கோதாவரி–காவிரி இணைப்புத் திட்டம் மற்றும் பரம்பிக்குளம்–ஆழியாறு மற்றும் பாண்டியாறு–புன்னம்புழா ஆகிய இரண்டு திட்டங்களையும் விரைந்து செயல்படுத்திட மத்திய அரசை வலியுறுத்தி, சம்மந்தப்பட்ட மஹாராஷ்டிரா, தெலுங்கானா, ஆந்திரா, கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்களின் இசைவினைப் பெற்று, மத்திய அரசிடம் போதிய அழுத்தத்தைக் கொடுத்து இத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு, விடியா திமுக அரசு தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இப்பொதுக்குழு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

**முன்மொழிபவர்கள்**

**திரு. S.P. வேலுமணி, M.L.A.,**
கழக தலைமை நிலையச் செயலாளர்
கோவை புறநகர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சி கொறடா
முன்னாள் அமைச்சர்

**திரு. S. ராஜு**
கழக அமைப்புச் செயலாளர்

**திரு. வாலாஜாபாத் பா. கணேசன், Ex. M.L.A.,**
கழக அமைப்புச் செயலாளர்

**திரு. R.S. ராஜேஷ்**
வட சென்னை வடக்கு (கிழக்கு) மாவட்டக் கழகச் செயலாளர்

**திரு. C.V. சேகர், Ex. M.L.A.,**
தஞ்சாவூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர்

**திரைப்பட இயக்குநர் நடிகர் S. ரவிமரியா**
கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர்

**திரு. R.B. உதயகுமார், M.L.A.,**
கழக புரட்சித் தலைவி பேரவைச் செயலாளர்
மதுரை புறநகர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர்
சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவர்
முன்னாள் அமைச்சர்

**திரு. செ. தாமோதரன், M.L.A.,**
கழக அமைப்புச் செயலாளர், முன்னாள் அமைச்சர்

**திரு. I.S. இன்பதுரை, Ex. M.L.A.,**
கழக வழக்கறிஞர் பிரிவுச் செயலாளர்

**திரு. K.A. பாண்டியன், M.L.A.,**
கடலூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர்

**திரு. G. சோபகுமார்**
கேரள மாநிலக் கழகச் செயலாளர்

**கலைமாமணி, சொல்லின் செல்வர் ஆவடிக்குமார்**
கழக செய்தித் தொடர்பாளர்
திருவள்ளூர் தெற்கு மாவட்ட இலக்கிய அணிச் செயலாளர்

**வழிமொழிபவர்கள் : அனைத்துப் பொதுக்குழு உறுப்பினர்களும்**

## தீர்மானம் – 10

### நீட் தேர்வு ரத்து குறித்து கபட நாடகம் ஆடிக்கொண்டிருக்கும் திமுக அரசுக்கு கடும் கண்டனம் !

மருத்துவக் கல்வி சேர்க்கைக்கு 12–ஆம் வகுப்பு மதிப்பெண்கள்தான் அடிப்படையாக விளங்கி வந்தது. அதனை மாற்றி நீட் தேர்வு முறையைப் புகுத்தி, ஏழை, எளிய மாணவ, மாணவியர்களின் மருத்துவக் கனவை சிதைத்தது தி.மு.க. இந்தியா முழுவதும் நீட் தேர்வு என்ற முறைக்கு மூலக் காரணம், அப்போது ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகித்த திமுக–வே ஆகும்.

இப்படி, நீட் தேர்வுக்கு காரணமாக இருந்துவிட்டு, 2021–ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின்போது 'நீட் தேர்வினை ரத்து செய்வோம்' என்ற போலி வாக்குறுதியை அளித்து ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தது.

நீட் தேர்வு ரத்து செய்வதற்கான ரகசியம் எங்களுக்குத் தெரியும் என்று திரு. உதயநிதி ஸ்டாலின் மேடைக்கு மேடை முழங்கினார். ஆட்சிக்கு வந்து 43 மாதங்கள் ஆகியும் நீட் தேர்வு அவலம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஏழை, எளிய கிராமப்புற மாணவ, மாணவியர் பாதித்துக் கொண்டிருக்கின்றனர். இருப்பினும், அரசுப் பள்ளிகளில் பயிலும் ஏழை, எளிய மாணவ, மாணவியரின் நலனைக் கருத்தில்கொண்டு 7.5 விழுக்காடு இடஒதுக்கீடு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், தமிழ் நாடு முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டதன் காரணமாக ஏழை, எளிய மாணவ, மாணவியர் மருத்துவக் கல்லூரிகளில் சேரும் வாய்ப்பினை ஓரளவு பெற்றுள்ளனர். இதற்கு நிரந்தரத் தீர்வு என்பது, நீட் தேர்வு ரத்து மட்டுமே.

தி.மு.க. ஆட்சிப் பொறுப்புக்கு வந்து, அதன் ஆட்சிக் காலமே முடிவடைய உள்ள நிலையில், நீட் தேர்வு ரத்து குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்காத திரு. ஸ்டாலினின் தலைமையிலான விடியா திமுக அரசிற்கு இப்பொதுக்குழு தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

## முன்மொழிபவர்கள்

**முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன், M.L.A.,**
கழக தேர்தல் பிரிவுச் செயலாளர்
திருப்பூர் மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**டாக்டர் K. கோபால், Ex. M.P.,**
கழக அமைப்புச் செயலாளர்

**திரு. S. ஆசைமணி, Ex. M.L.A.,**
கழக அமைப்புச் செயலாளர்

**திரு. T.G. வெங்கடேஷ் பாபு, Ex. M.P.,**
வட சென்னை வடக்கு (மேற்கு)
மாவட்டக் கழகச் செயலாளர்

**திரு. S. பவுன்ராஜ், Ex. M.L.A.,**
மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர்

**திரு. ரதிமீனா P.S. சேகர்**
கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர்

**திரு. K.T. ராஜேந்திரபாலாஜி**
கழக அமைப்புச் செயலாளர்
விருதுநகர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**செல்வி விந்தியா**
கழக கொள்கை பரப்பு இணைச் செயலாளர்

**திரு. S. அப்துல் ரஹீம்**
கழக சிறுபான்மையினர் நலப் பிரிவுச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. ஆ. அருண்மொழிதேவன், M.L.A.,**
கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர்

**திரு. MGR S. மதி**
புதுடெல்லி மாநிலக் கழகச் செயலாளர்

**டாக்டர் M. ஜெமிலா**
கழக செய்தித் தொடர்பாளர்

**வழிமொழிபவர்கள் : அனைத்துப் பொதுக்குழு உறுப்பினர்களும்**

## தீர்மானம் – 11

**வாக்காளர்கள் சேர்த்தல், நீக்குதல் போன்றவற்றில் பல்வேறு குளறுபடிகள் நிலவுவதை சரிசெய்திடவும்; தேர்தல் நியாயமாக நடத்தப்படவும் இந்திய தேர்தல் ஆணையத்தை வலியுறுத்தல்!**

நாடாளுமன்றத் தேர்தல், சட்டமன்றத் தேர்தல் ஆகியவற்றை நேர்மையாகவும், நியாயமாகவும் நடத்துவது இந்தியத் தேர்தல் ஆணையத்தின் கடமை. இதற்கான அதிகாரம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற மக்களவைப் பொதுத் தேர்தலின்போது, லட்சக்கணக்கான வாக்காளர்களின் பெயர்கள் ஆங்காங்கே விடுபட்டுவிட்டதாகப் புகார்கள் வந்த வண்ணம் இருந்தது. இதுமட்டுமல்லாமல், ஒரு வாக்காளருக்கு இரண்டு இடங்களில் பெயர்கள் இருந்ததாகவும், இறந்தவர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்ததாகவும் புகார்கள் தெரிவிக்கப்பட்டது.

ஆளும் கட்சியினர், தங்களுக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, இல்லாத வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதாகவும், இருக்கின்ற வாக்காளர்களை பட்டியலில் இருந்து நீக்குவதாகவும் புகார்கள் தொடர்ந்து வந்த வண்ணம் இருந்தன.

ஜனநாயகத்தின் உயிர் மூச்சே வாக்காளர்களின் வாக்குகள் தான். அவர்கள் தான் ஜனநாயகத்தின் இறுதி எஜமானர்கள். அப்படிப்பட்ட வாக்காளர்களை, வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்குவது, இந்திய ஜனநாயகத்திற்கு எதிரான ஒன்றாகும்.

ஆகவே, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, வாக்காளர் பட்டியலில் நிலவும் குளறுபடிகளை நிவர்த்தி செய்யவும், தேர்தல் நியாயமாக நடத்தப்பட உண்மையான வாக்காளர்களை பட்டியலில் சேர்க்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தியத் தேர்தல் ஆணையத்தை இப்பொதுக்குழு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

**முன்மொழிபவர்கள்**

**திரு. D. ஜெயக்குமார்**
கழக அமைப்புச் செயலாளர்
வட சென்னை தெற்கு (கிழக்கு)
மாவட்டக் கழகச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. பா. பென்ஜமின்**
கழக அமைப்புச் செயலாளர்
திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திருமதி S. வளர்மதி**
கழக அமைப்புச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. T. ரத்தினவேல், Ex. M.P.,**
கழக அமைப்புச் செயலாளர்

**திரு. A.K. சீனிவாசன்**
கழக அமைப்புச் செயலாளர்

**திரு. V.V.R. ராஜ் சத்யன்**
கழக தகவல் தொழில்நுட்பப் பிரிவுச் செயலாளர்

**திரு. தி.நகர் B. சத்தியா, Ex. M.L.A.,**
தென் சென்னை வடக்கு (மேற்கு)
மாவட்டக் கழகச் செயலாளர்

**திரு. இரா. குமரகுரு, Ex. M.L.A.,**
கள்ளக்குறிச்சி மாவட்டக் கழகச் செயலாளர்

**திரு. P.K. வைரமுத்து, Ex. M.L.A.,**
புதுக்கோட்டை தெற்கு
மாவட்டக் கழகச் செயலாளர்
முன்னாள் வாரியத் தலைவர்

**திரு. V.S. பாஸ்கரன்**
அந்தமான் மாநிலக் கழகச் செயலாளர்

**திரைப்பட நடிகை திருமதி கௌதமி**
கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர்

**திரு. P. அதிவீரராமபாண்டியன்**
கழக செய்தித் தொடர்பாளர்

**வழிமொழிபவர்கள் : அனைத்துப் பொதுக்குழு உறுப்பினர்களும்**

## தீர்மானம் – 12

**கல்வி, பொருளாதாரம், வேலைவாய்ப்பு ஆகியவற்றில் அனைவருக்கும் சம உரிமையையும், சம வாய்ப்புகளையும் வழங்கிடும் வகையில், சாதிவாரி கணக்கெடுப்பினை எடுக்க விடியா திமுக அரசை வலியுறுத்தல்!**

கல்வி, பொருளாதாரம், வேலைவாய்ப்பு ஆகியவற்றில் அனைவருக்கும் சம உரிமையும், சம வாய்ப்பும் வழங்கப்பட வேண்டுமென்றால், சாதிவாரி கணக்கெடுப்பு எடுக்க வேண்டியது அவசியம். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்கள் தொகை கணக்கெடுப்பது மத்திய அரசின் பணியாகும். அதே சமயம், சாதிவாரி கணக்கெடுப்பு எடுக்கும் பணியை மாநில அரசு செய்வதற்கு எந்தத் தடையும் இல்லை. இதற்கான அதிகாரம் மாநில அரசுகளின் கையில்தான் இருக்கிறது. ஏனென்றால், இடஒதுக்கீடு என்பது மாநில அரசுப் பட்டியலில்தான் இருக்கிறது.

இந்த அதிகாரத்தைப் பயன்படுத்திதான் கர்நாடகா, பீகார் போன்ற பல மாநிலங்களில் சாதிவாரி கணக்கெடுப்புகளை எடுத்தும், சில மாநிலங்கள் அப்பணிகளை தொடர்ந்துகொண்டும் இருக்கிறது. இதனைப் பின்பற்றி தமிழ் நாடு அரசும் சாதிவாரி கணக்கெடுப்பை எடுக்க வேண்டும். ஆனால், தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்திக்கொள்ளாமல், மத்திய அரசின் மீது பொறுப்பை சுமத்தி பிரச்சனையை திசை திருப்பிவிடுவது என்பது, மாநிலத்தின் உரிமையை தாரைவார்ப்பதற்குச் சமம் என்பதோடு மட்டுமல்லாமல் சமூக நீதிக்கு எதிரான செயல்.

கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் இடஒதுக்கீடு வழங்குவது என்பது மாநில உரிமை தொடர்புடையதாகும். இதன் அடிப்படையில், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கான

இடஒதுக்கீடு வழங்கப்பட்டது. இதேபோன்று, இஸ்லாமிய சமுதாய மக்களுக்கும், அருந்ததிய சமுதாய மக்களுக்கும் இடஒதுக்கீடு வழங்கப்பட்டது. இதன் அடிப்படையில், சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தாமல், மத்திய அரசின் மீது பழி சுமத்துவது என்பது பொறுப்பை தட்டிக் கழிக்கும் செயல்.

சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துவதை தட்டிக் கழிக்கும் திமுக–விற்கு இப்பொதுக்குழு தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு, சாதிவாரி கணக்கெடுப்பை உடனடியாக நடத்த இப்பொதுக்குழு விடியா திமுக அரசை வலியுறுத்துகிறது.

**முன்மொழிபவர்கள்**

**திரு. C.Ve. சண்முகம், M.P.,**
கழக அமைப்புச் செயலாளர்
விழுப்புரம் மாவட்டக் கழகச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. V. கருப்பசாமி பாண்டியன், Ex. M.L.A.,**
கழக அமைப்புச் செயலாளர்

**திரு. சுதா கே. பரமசிவன்**
கழக அமைப்புச் செயலாளர்

**திரு. M.S.M. ஆனந்தன், M.L.A.,**
கழக அமைப்புச் செயலாளர், முன்னாள் அமைச்சர்

**திரு. K. சிங்காரம், Ex. M.L.A.,**
கழக அமைப்புச் செயலாளர்

**திரு. M.C. சம்பத்**
கடலூர் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. M.K. அசோக், Ex. M.L.A.,**
தென் சென்னை தெற்கு (கிழக்கு)
மாவட்டக் கழகச் செயலாளர்

**திரு. K. அசோக்குமார், M.L.A.,**
கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர்

**திரு. முருக்கோடை M.P. ராமர்**
தேனி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர்

**டாக்டர் கோ. சமரசம், Ex. MLA.,**
கழக செய்தித் தொடர்பாளர்

**வழக்கறிஞர் திரு. V. காசிநாதபாரதி**
கழக செய்தித் தொடர்பாளர்

**மற்றும் கழக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்**

**வழிமொழிபவர்கள் : அனைத்துப் பொதுக்குழு உறுப்பினர்களும்**

## தீர்மானம் – 13

**i) சிறுபான்மையினர் நலன் காக்கும் வகையில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலங்களில் நடைமுறைப்படுத்திய திட்டங்களை முடக்கிவிடாமல் தொடர்ந்து செயல்படுத்தி, சிறுபான்மையினர் நலன் காக்கப்பட வேண்டும் என்று விடியா திமுக அரசுக்கு வலியுறுத்தல் !**

**ii) 2021, சட்டமன்றப் பொதுத் தேர்தலின்போது, திமுக ஆட்சிக்கு வந்தால் 20 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் வாடும் இஸ்லாமிய சிறைவாசிகளை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துவிட்டு, இஸ்லாமிய சிறைவாசிகளை விடுதலை செய்வதற்கு எவ்வித முயற்சியையும் மேற்கொள்ளாத, விடியா திமுக அரசைக் கண்டிக்கின்றோம் !**

**iii) பட்டியலின மக்களின் உரிமைகளைக் காப்பாற்றவும், பாதுகாக்கவும் தவறிய விடியா திமுக அரசுக்கு கண்டனம் !**

**i)** இந்தியா என்பது வேற்றுமையில் ஒற்றுமை காணும் தேசம். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மதச்சார்பில்லாத ஓர் மக்கள் இயக்கமாகும். ‘பொன்மனச் செம்மல்’ புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., ‘சமூகநீதி காத்த வீராங்கனை’ புரட்சித் தலைவி அம்மா, கழகப் பொதுச் செயலாளர் ‘புரட்சித் தமிழர்’ மாண்புமிகு எடப்பாடியார் ஆகியோரது ஆட்சிக் காலங்களில் சிறுபான்மையின சமுதாய மக்களுக்கு உற்ற நண்பனாக இருந்து இஸ்லாமியப் பெருமக்களுக்கும், கிறிஸ்தவப் பெருமக்களுக்கும், சிறப்புத் திட்டங்களின் வாயிலாக அளப்பரிய நன்மைகளையும், ஏராளமான உதவிகளையும் செய்துள்ளது. ஆனால், விடியா திமுக அரசோ அவற்றையெல்லாம் முடக்கி வருகிறது.

எடுத்துக்காட்டாக, பாதிரியார்கள், கன்னியாஸ்திரிகள் உள்ளிட்ட கிறிஸ்தவப் பெருமக்கள் ஜெருசலேம் புனித யாத்திரை செல்வதற்கு

கழக அரசு வழங்கி வந்த நிதியுதவி, கடந்த 43 மாதங்களாக விடியா திமுக அரசு நிறுத்தி உள்ளதாக வரும் செய்திகள் கண்டிக்கத்தக்கது.

சிறுபான்மையினர் நடத்தும் தனியார் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவதற்குக்கூட திமுக அரசு பாரபட்சம் காட்டுவது கண்டிக்கத்தக்கது. தேவையற்ற காலதாமதத்தை ஏற்படுத்துவதால் அப்பள்ளிகள் கடும் சிரமத்தை எதிர்கொள்கின்றன.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து வலியுறுத்தி வரும், நடைமுறையில் இருந்து வரும் ஆதிதிராவிடர்களுக்குரிய சலுகைகள் அனைத்தும், மதம் மாறிய ஆதிதிராவிட கிறிஸ்தவ வகுப்பினருக்கும், மிஸ்ரா ஆணையத்தின் பரிந்துரையின்படி தொடர்ந்து வழங்கிடவும், இனியும் காலம் தாழ்த்தாமல் நடைமுறைப்படுத்திடவும், மத்திய அரசையும், விடியா திமுக அரசையும் இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

**ii)** 2021, சட்டமன்றப் பொதுத் தேர்தலின்போது, திமுக ஆட்சிக்கு வந்தால், 20 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் வாடும் இஸ்லாமிய சிறைவாசிகளை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துவிட்டு, எவ்வித முயற்சியையும் மேற்கொள்ளாத விடியா திமுக அரசை இப்பொதுக்குழு கண்டிக்கிறது.

வயது மூப்பு, நோய் இவைகளின் காரணமாக எஞ்சியுள்ள வாழ்க்கையை அவர்கள் குடும்பத்தினருடன் கழிக்கும் வகையில், 20 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் வாடும் இஸ்லாமிய சிறைவாசிகளை விடுதலை செய்வதற்கான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று விடியா திமுக அரசை இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

**iii) பட்டியலின மக்களின் பாதுகாப்பு :**

பட்டியலின மக்களின் பாதுகாப்பு இன்று கேள்விக்குறியாக இருக்கிறது. சமூகநீதி பேசும் திமுக, ஆட்சியிலும், கட்சியிலும், சமூக நீதியை நிலைநாட்டாத ஆட்சியாளர்கள் பொது நலனை பின்னுக்குத் தள்ளி சுயநலம், குடும்ப நலம் ஆகியவையே பிரதானம் என்றிருக்கும் விடியா திமுக ஆட்சியில் பட்டியலின மக்களுக்குப் பாதுகாப்பற்ற நிலையே தொடர்கிறது.

வேங்கைவயல், நாங்குநேரி, நாய்க்கனேரி, பாப்பாரப்பட்டி சம்பவங்களே இதற்கு சாட்சியங்கள். இப்படி தொடர்கதையாக இருந்துவரும் இதுபோன்ற பிரச்சனைகளில், அச்சமுதாய மக்களைக் காப்பாற்றத் தவறி இருக்கும் விடியா திமுக அரசுக்கு இப்பொதுக்குழு கடும் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

**முன்மொழிபவர்கள்**

**திரு. செ. செம்மலை**
கழக அமைப்புச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. அக்ரி S.S. கிருஷ்ணமூர்த்தி, M.L.A.,**
கழக விவசாயப் பிரிவுச் செயலாளர்
திருவண்ணாமலை தெற்கு
மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர்

**திரு. S.R. விஜயகுமார், Ex. M.P.,**
கழக மாணவர் அணிச் செயலாளர்

**திரு. K.T. பச்சைமால்**
கழக அமைப்புச் செயலாளர், முன்னாள் அமைச்சர்

**திரு. சிவா. ராஜமாணிக்கம்**
கழக அமைப்புச் செயலாளர்

**திரு. K.C. கருப்பணன், M.L.A.,**
ஈரோடு புறநகர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. விருகை V.N. ரவி, Ex. M.L.A.,**
தென் சென்னை தெற்கு (மேற்கு)
மாவட்டக் கழகச் செயலாளர்
முன்னாள் வாரியத் தலைவர்

**திரு. G. வெங்கடாஜலம், Ex. M.L.A.,**
சேலம் மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர்

**திரு. R.K. ரவிச்சந்திரன்**
விருதுநகர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர்

**திருமதி நிர்மலா பெரியசாமி**
கழக செய்தித் தொடர்பாளர்

**மற்றும் கழக தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் (மகளிர்)**

**வழிமொழிபவர்கள் : அனைத்துப் பொதுக்குழு உறுப்பினர்களும்**

## தீர்மானம் – 14

**மாநிலங்களின் உரிமையைப் பறிக்கும் வகையில்,**
**மாநிலப் பட்டியலில் இடம்பெற்றிருந்த கல்வியை, நாட்டில் அவசர நிலை அமலில் இருந்த காலகட்டத்தில் பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டதை,**
**மீண்டும் மாநிலப் பட்டியலில் சேர்க்கும் வகையில்,**
**அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர மத்திய அரசை வலியுறுத்தல் !**

பன்முகத் தன்மை கொண்ட இந்தியாவில் அனைத்திற்கும் ஒரே நிலைப்பாடு என்பது ஏற்றுக்கொள்ள முடியாது என்ற அடிப்படையில் தான் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய அறிவார்ந்த வல்லுநர்கள்கூட, அழிவில்லாத செல்வமாகிய கல்வியை மாநிலப் பட்டியலிலேயே வைத்தனர். நாட்டில் அவசர நிலை அமலில் இருந்தபோது, மாநிலப் பட்டியலில் இருந்த கல்வியானது 1976–ஆம் ஆண்டில் பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டது. இப்போதும் அந்த நிலையே தொடர்கிறது.

இந்தியா என்பது பல மாநிலங்கள் அடங்கிய தேசம். பன்முகத் தன்மை கொண்ட இந்தியாவில் நாடு முழுவதும் ஒரே கல்விக் கொள்கை என்பது பொருத்தமற்றது. கல்வி கடைக்கோடி வரை சென்றடைவதை மாநில அரசுகள் மட்டுமே உறுதிசெய்ய முடியும்.

பொதுப் பட்டியலில் இடம்பெற்றுள்ள இனங்கள் குறித்து மாநில, மத்திய அரசுகள் இரண்டுமே சட்டங்கள் இயற்றிக்கொள்ளலாம் என்ற நிலை இருந்தாலும், அப்படி இயற்றப்படும் சட்டங்களில் ஒன்றுக்கொன்று முரண்பாடு இருப்பின், மத்திய அரசின் சட்டமே செல்லும் என்ற நிலையில், மாநிலங்களுக்கு வழங்கப்பட்ட உரிமை பறிக்கப்படுகிறது. அதனால்தான், தேசிய அளவில்

ஒரே கல்விக் கொள்கையை செயல்படுத்தும் நிலைமையை மத்திய அரசு உருவாக்க முயலுகிறது. எனவேதான், மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கையை ஏற்க முடியாத நிலையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இருந்து வருகிறது. அதுமட்டுமல்ல, கல்வியை பொதுப் பட்டியலில் இருந்து மாநிலப் பட்டியலுக்கு மாற்றுவதற்கு மத்திய அரசை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

இந்நிலையில் தான், தேசிய அளவிலான கட்சிகள் இடம்பெறும் மத்திய அரசானது, எடுத்துக்கொண்ட அதிகாரத்தை திருப்பிக் கொடுக்க மறுத்து வருகிறது. அதிகாரக் குவியலை தன்வசமே வைத்துக்கொள்ள வேண்டும் என்கிற மனப்போக்கில் இருந்து வரும் மத்திய அரசானது மாநிலங்களின் கோரிக்கையினை ஏற்க மறுத்து வருகிறது. எப்போதும், எந்த நிலையிலும் மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று, மாநில நலன் கருதி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது.

அதுமட்டுமல்ல, உயர் கல்வியை மத்தியப் பட்டியலுக்கு மாற்ற வேண்டியது அவசியம் என்ற கருத்தை காங்கிரஸ், பா.ஜ.க. ஆகிய இரண்டு கட்சிகளுமே வலியுறுத்தி வருவது மேலும் சிக்கலை உருவாக்குவதாக இருக்கிறது.

எனவே, மாநிலப் பட்டியலில் இருந்த கல்வியை பொதுப் பட்டியலுக்கு மாற்றி தன்வசம் வைத்துக்கொண்டிருக்கின்ற மத்திய அரசு, மீண்டும் அதை மாநிலப் பட்டியலுக்கே மாற்றிக் கொடுத்து, அந்தந்த மாநிலங்களுக்கு ஏற்ப கல்விக்

கொள்கையை வகுத்துக்கொள்ள வழி செய்யும் வகையில் அரசியல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர வேண்டும் என்று மத்திய அரசை இப்பொதுக்குழு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

## முன்மொழிபவர்கள்

**திரு. என். தளவாய்சுந்தரம், M.L.A.,**
கழக அமைப்புச் செயலாளர்
கன்னியாகுமரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர்

**திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், M.L.A.,**
கழக அமைப்புச் செயலாளர்
திருப்பூர் புறநகர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. N.R. சிவபதி**
கழக எம்.ஜி.ஆர். இளைஞர் அணிச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. ஆதிராஜாராம்**
கழக அமைப்புச் செயலாளர்
தென் சென்னை வடக்கு (கிழக்கு) மாவட்டக் கழகச் செயலாளர்
முன்னாள் வாரியத் தலைவர்

**திரு. வரகூர் அ. அருணாசலம்**
கழக அமைப்புச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. K.C. வீரமணி**
திருப்பத்தூர் மாவட்டக் கழகச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. K.P. கந்தன், Ex. M.L.A.,**
சென்னை புறநகர் மாவட்டக் கழகச் செயலாளர்

**திரு. R. இளங்கோவன்**
சேலம் புறநகர் மாவட்டக் கழகச் செயலாளர்
முன்னாள் தலைவர்,
தமிழ் நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி

**திரு. PR. செந்தில்நாதன், M.L.A.,**
சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர்

**திரு. A.S. மகேஸ்வரி, Ex. MLA.,**
கழக செய்தித் தொடர்பாளர்

**வழிமொழிபவர்கள் : அனைத்துப் பொதுக்குழு உறுப்பினர்களும்**

## தீர்மானம் – 15

### தமிழ் நாட்டிற்கான நிதிப் பகிர்வினை பாரபட்சமில்லாமல் வழங்கிட மத்திய அரசை வலியுறுத்தல்!

நிதி ஆணையத்தால் மாநிலங்களுக்கு வழங்கப்படும் நிதிப் பகிர்வு என்பது பீகார், உத்தரப் பிரதேசம், மத்திய பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர், ஜார்க்கண்ட் போன்ற மாநிலங்களுக்கு அதிகமாகவும், வளர்ச்சியடைந்த மாநிலங்களான மகாராஷ்டிரா, கர்நாடகா, தமிழ் நாடு, குஜராத், ஆந்திரா போன்ற மாநிலங்களுக்கு குறைவாகவும் வழங்கப்படுகிறது.

மத்திய அரசின் கருவூலத்திற்கு தமிழ் நாட்டிலிருந்து செல்லும் வருவாயில், நான்கில் ஒரு பங்குகூட தமிழ் நாட்டிற்கு நிதிப் பகிர்வாக கிடைப்பதில்லை. இதன் காரணமாக, வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற முடியாத சூழ்நிலை உருவாகிறது. தற்போது, மத்திய அரசால் கடைபிடிக்கப்பட்டு வரும் நிதி ஒதுக்கீட்டிற்கான அளவுகோலின்படி, தமிழ் நாடு போன்ற உற்பத்தி மாநிலங்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. எனவே, இத்தகைய நிதி ஒதுக்கீட்டு முறை மறுபரிசீலனை செய்யப்பட வேண்டியது அவசியமாகிறது.

தற்போது, 16–ஆவது நிதிக் குழு, நிதிப் பகிர்வு குறித்து மாநிலங்களைக் கலந்தாலோசித்து வருகின்ற நிலையில், இந்தியப் பொருளாதாரத்திற்கு மாநிலங்களின் பங்களிப்பு, கல்வி மற்றும் சுகாதாரக் குறியீடுகளில் எட்டப்பட்ட சாதனை, நிதி மேலாண்மை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு வளர்ச்சியடைந்த மாநிலங்களுக்கு கூடுதல் நிதிப் பகிர்வை வழங்கவும், கூடுதல் வரி என்றழைக்கப்படும் செஸ் (cess), சர்சார்ஜ் (surcharge) போன்றவற்றை நிதிப் பகிர்வு

வரம்பிற்குள் கொண்டுவரவும், நிதிப் பகிர்வை 50 விழுக்காடாக உயர்த்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மத்திய அரசை இப்பொதுக்குழு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

## முன்மொழிபவர்கள்

**திருமதி பா. வளர்மதி**
கழக மகளிர் அணிச் செயலாளர்
கழக செய்தித் தொடர்பாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. S.T.K. ஜக்கையன், Ex. M.P.,**
கழக அமைப்புச் செயலாளர்
தேனி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர்

**திரு. T.K.M. சின்னையா**
அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்றத் தலைவர்
முன்னாள் அமைச்சர்

**திரு. N. முருகுமாறன், Ex. M.L.A.,**
கழக அமைப்புச் செயலாளர்

**திரு. கா. சங்கரதாஸ்**
கழக அமைப்பு சாரா ஓட்டுநர்கள் அணிச் செயலாளர்

**திரு. M.R. விஜயபாஸ்கர்**
கரூர் மாவட்டக் கழகச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. திருக்கழுக்குன்றம் S. ஆறுமுகம்**
செங்கல்பட்டு கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர்

**திரு. C. மகேந்திரன், M.L.A.,**
திருப்பூர் புறநகர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர்

**திரு. M.A. முனியசாமி அவர்கள்**
ராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர்

**திரு. R.M. பாபு முருகவேல், Ex. MLA., அவர்கள்**
கழக செய்தித் தொடர்பாளர்,
கழக வழக்கறிஞர் பிரிவு இணைச் செயலாளர்

**வழிமொழிபவர்கள் : அனைத்துப் பொதுக்குழு உறுப்பினர்களும்**

## தீர்மானம் – 16

**‘அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்’**
**புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா ஆகிய**
**இருபெரும் தலைவர்களின் வழியிலே செயல்பட்டு,**
**ஆளுமைத் திறன் மிக்க அரசியல் தலைவராகத் திகழும்**
**கழகப் பொதுச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்,**
**தமிழ் நாடு முன்னாள் முதலமைச்சர் ‘புரட்சித் தமிழர்’**
**மாண்புமிகு எடப்பாடி K. பழனிசாமி அவர்களை**
**2026–ல் மீண்டும் தமிழ் நாடு முதலமைச்சராக்குவோம் என சூளுரை ஏற்போம் !**

‘பொன்மனச் செம்மல்’ புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் மக்கள் இயக்கமாகத் தோற்றுவிக்கப்பட்டு, ‘தங்கத் தாரகை’ இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் வளர்த்தெடுக்கப்பட்டு, இன்று ‘புரட்சித் தமிழர்’ மாண்புமிகு எடப்பாடியார் அவர்களால் காப்பாற்றப்பட்டு, பல்வேறு வளர்ச்சிகளைப் பெற்றுள்ள அரசியல் பேரியக்கமாம் ‘அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்’ தமிழ் நாட்டின் தனிப்பெரும் பேரியக்கமாகத் திகழ்ந்து, 52 ஆண்டு காலத்திற்கும் மேலாக இந்திய அரசியல் வானில் துருவ நட்சத்திரமாய், நாட்டு மக்களுக்கு, தனது தன்னலமற்ற தொண்டின் மூலம் வெளிச்சத்தைத் தந்துகொண்டிருக்கிறது.

‘அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்’ ஒரு ஆலமரமாக, ஆயிரங்காலத்துப் பயிராக தழைத்தோங்கி நிற்கிறது. எதிரிகளால் ஊடுருவ முடியாத அளவிற்கு கழகம் ஒரு எஃகுக் கோட்டையாகத் திகழ்கிறது. “எனக்குப் பின்னாலும், இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் வந்தாலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மக்களுக்காகவே இயங்கும்’’ என்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சூளுரையை மெய்ப்பிக்கும் வகையில், மக்கள் சேவையில் தன்னை கரைத்துக்கொண்டு தாளாது பணியாற்றி, லட்சிய நோக்கத்தோடு செயல்பட்டு வருவதோடு;

கழகம் பல்வேறு சோதனைகளைச் சந்தித்த நிலையிலும், அவற்றையெல்லாம் தவிடுபொடியாக்கி வெற்றி நடை போட்டு வருகிறது.

நம் இயக்கத்தின் பரிணாம வளர்ச்சியில் ஆளுமை மிக்க மாபெரும் தலைவர்களால் உருவாக்கப்பட்டு, வளர்த்தெடுக்கப்பட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா ஆகிய இருபெரும் தலைவர்களின் வழியிலே செயல்பட்டு, ஆளுமைத் திறன் மிக்க அரசியல் தலைவராக, கழகப் பொதுச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், தமிழ் நாடு முன்னாள் முதலமைச்சர் 'புரட்சித் தமிழர்' மாண்புமிகு எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் திகழ்கிறார்.

கிளைக் கழகச் செயலாளராக கழகப் பணியைத் தொடங்கி, தனது கடுமையான உழைப்பால், கொண்ட கொள்கையால், லட்சிய வேட்கையோடும், விடா முயற்சியோடும், கொள்கைப் பற்றோடும், இயக்கத்தின்பால் மாறாத விசுவாசத்தோடும் தொடர்ந்து பயணித்து வருகிறார். இரண்டு கோடிக்கும் மேற்பட்ட தொண்டர்களுக்கு பாதுகாப்பு அரணாகத் திகழ்ந்து '**கழகப் பொதுச் செயலாளர்**' என்கிற உயர்வினைப் பெற்று, இந்த இயக்கத்திற்காகத் தன்னையே அர்ப்பணித்து, எத்தகைய சோதனைகள், வேதனைகள் வந்தாலும், தலைதாளாத சிங்கமாக தன்மானத்தோடு தலைநிமிர்ந்து நிற்கிறார்.

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மறைவிற்குப் பிறகு, நான்கரை ஆண்டு காலத்திற்கும் மேலாக கழக அரசைக் காப்பாற்றி, பல்வேறு நலத் திட்டங்களைத் தந்து, அவற்றின் வாயிலாக அளவிட முடியாத சாதனைகளைப் படைத்து கழகத்திற்குப் பெருமையைத் தேடித் தந்தவர் மாண்புமிகு எடப்பாடியார் அவர்கள்.

எதிர்வரும் 2026 சட்டமன்றப் பொதுத் தேர்தலில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மகத்தான வெற்றியைப் பெறுவதற்கு, ராஜதந்திர நடவடிக்கைகளையும், அரசியல் வியூகங்களையும் சிறந்ததொரு கூட்டணியையும் அமைத்து, தேர்தல் வியூகங்களை வகுத்து தமிழக வாக்காளப் பெருமக்களின் நன்மதிப்பைப் பெற்று, மக்கள் விரோத விடியா திமுக ஆட்சியை வீட்டுக்கு அனுப்பி, 2026–ல் மாண்புமிகு எடப்பாடியார் அவர்கள் தலைமையில் கழக ஆட்சி அமைவதற்கு கழக நிர்வாகிகளும், கழக உடன்பிறப்புகளும் என்றென்றும் துணை நிற்போம் என்று உறுதி ஏற்று சூளுரைப்போம்; வெற்றி பெறுவோம் என இந்தப் பொதுக்குழு ஏகமனதாகத் தீர்மானிக்கிறது.

<u>முன்மொழிபவர்கள்</u>

**திரு. செல்லூர் K. ராஜூ, M.L.A.,**
கழக அமைப்புச் செயலாளர்
மதுரை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**டாக்டர் பி. வேணுகோபால், Ex. M.P.,**
கழக மருத்துவ அணிச் செயலாளர்

**திரு. இசக்கி சுப்பையா, M.L.A.,**
கழக அமைப்புச் செயலாளர்
திருநெல்வேலி புறநகர்
மாவட்டக் கழகச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. தாடி ம. இராசு**
அண்ணா தொழிற்சங்கப் பேரவைத் தலைவர்

**திரைப்பட இயக்குநர் திரு. R.V. உதயகுமார்**
கழக கலைப் பிரிவுச் செயலாளர்

**திரு. K.V. இராமலிங்கம், Ex. M.P.,**
ஈரோடு மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர்
முன்னாள் அமைச்சர்

**திரு. சிட்லபாக்கம் ச. ராசேந்திரன், Ex. M.P.,**
செங்கல்பட்டு மேற்கு
மாவட்டக் கழகச் செயலாளர்

**திரு. அம்மன் K. அர்ச்சுணன், M.L.A.,**
கோவை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர்

**திரு. தச்சை N. கணேசராஜா**
திருநெல்வேலி மாநகர்
மாவட்டக் கழகச் செயலாளர்

**திரு. M. கோவை சத்யன்**
கழக செய்தித் தொடர்பாளர்

**வழிமொழிபவர்கள் : அனைத்துப் பொதுக்குழு உறுப்பினர்களும்**

** ** ** ** **